சூலை - 2010

திருவள்ளுவர் ஆண்டு 2041

செந்தமிழ்

தொகுதி : 54
பகுதி : 9

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம்
செந்தமிழ்க் கல்லூரி

மதுரை - 625 001

[ஐந்து நட்சத்திரத் தகுதி பெற்றது]

(மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைப்புப் பெற்றது)

தமிழாசிரியர் பயிற்சிச் சான்றிதழ் வகுப்பு

(TAMIL PANDIT TRAINING CERTIFICATE COURSE)

(ஆண் - பெண் இருபாலருக்கும்)

தகுதி : புலவர் பட்டயம் / பி.லிட். பட்டம் / பி.ஏ. தமிழ் பட்டம் தேர்ச்சி

மிகக் குறைந்த கட்டணம் !

நன்கொடை கிடையாது

காலம் : 90 வேலை நாட்கள்

(முழுநேரப் படிப்பு)

2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

முனைவர் எஸ். விஜயன்
முதல்வர் (பொறுப்பு)

திரு. இரா. குருசாமி பி.ஏ.
செயலாளர்

செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 54 | திங்கள் இதழ்

பகுதி : 9 | திருவள்ளுவர் ஆண்டு 2041

ஜுலை 2010

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்
இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

பொருளடக்கம்

வாழ்க்கைப் பற்றிய கண்ணோட்டம் குறுந்தொகை — 4
முனைவர். சுப. அண்ணாமலை

செந்தமிழ் இதழும் செம்மொழி அண்ணலும் ! — 6
புலவர் சி. பாண்டுரங்கன்

சங்க இலக்கியங்களில் மொழி சாராக் கருத்துப் பரிமாற்றம் — 7
முனைவர் வீ. ரேணுகாதேவி

சங்க இலக்கியத்தில் பூ உதிர் காட்சிகள் — 13
முனைவர் இ.கி. இராமசாமி

திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ் — 18
பேரா. நெல்லை. ந. சொக்கலிங்கம்

சங்க இலக்கியம் சுட்டும் சூழல் மாசு — 26
பேரா. மு. கசுத்தூரிபாய், எம்.எசி., எம்.பில்.

திருக்குறள் வரலாறு — 29
மகாவித்துவான் ரா. ராகவய்யங்கார்

கருணாமிருத சாகரம் — *ஆதி. பாலசுந்தரன்* — 37

இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

சூலை மாத இதழாக தங்கள் கைகளில் தவழ்கிறது. குறுந்தொகை காட்டும் வாழ்க்கைப் பற்றிய கண்ணோட்டத்தில் முது பெரும் முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் "காதலைவிட நட்பே பெரியது" என்ற கருத்துப்பட மொழிவதைக் காண்கிறோம். "செந்தமிழ் இதழும் செம்மொழி அண்ணலும்" என்ற தலைப்பில் புலவர் சி. பாண்டுரங்கன் அவர்களின் கவிதை. மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வரலாற்றின் ஒரு பகுதியை எடுத்தியம்புகிறது. முனைவர் வி. ரேணுகாதேவி அவர்களுடைய "மொழியியல் கருத்துக் கட்டுரை" சென்ற இதழின் தொடர்ச்சியாக நிறைவு பெறுகிறது. சங்க இலக்கியத்தில் "பூ உதிர்க் காட்சிகள்" என்ற தலைப்பில் யாதவர் கல்லூரி முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இ.கி. இராமசாமி அவர்களின் கற்பனை நயத்தோடு தமிழ்நாட்டு "மரப்பூ" வகைகளை உதிரவிட்டு வனப்பூட்டுகிறார். பேராசிரியர் நெல்லை ந. சொக்கலிங்கம் அவர்கள் திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ் என்ற நூலை அறிமுகப்படுத்துகிறார். "சங்க இலக்கியம் சுட்டும் சூழல் மாசு" படித்துப் பின்பற்றத்தக்க கட்டுரை. இக்கட்டுரையின் ஆசிரியர் பேராசிரியை மு.கசுத்தூரிபாய் கரும்பாலை, தவப்பள்ளி, அட்டிற் சாலை போன்ற இடங்களில் இருந்து வரக்கூடிய புகைகளின் தன்மைகளைப் புகழ்கின்றார். நிறைவாக பெரும்புலவர் மகாவித்துவான் ரா.ராகவையங்கார் அவர்களுடைய "திருக்குறள் வரலாறு" முன்னோர் மொழிபொருளைப் பொன்னே போல் போற்றத்தக்க வகையில் இம்மாத இதழில் இடம் பெற்றிருக்கிறது.

இலக்கியத் தேனைச் சுவைக்கும் இனிய நெஞ்சங்களுக்கு இந்த இதழ் காணிக்கை.

முனைவர் க. சின்னப்பா

வாழ்க்கைப் பற்றிய கண்ணோட்டம் குறுந்தொகை

முனைவர். சுப. அண்ணாமலை
மதுரை

சங்க இலக்கிய அகப்பாடல்கள் காதலைப் பற்றியவை ஆயினும் காதலையும் உள்ளடக்கிய வாழ்க்கையைப் பற்றிய அன்றைய மக்களின் கண்ணோட்டத்தையும் கூறுபவை ஆகும்.

சங்க காலச் சமுதாயம் பெண்ணை உயர்நிலையில் வைத்துப் போற்றியது. பெண்ணை யாரும் பழிக்கக் கூடாது என்பதில் மக்கள் கருத்தாக இருந்தார்கள். சான்றாகக் குறுந்தொகையில் ஒரு தலைவன் எண்ணியதைக் குறிப்பிடலாம். அவன் தன் காதலைத் தலைவியிடம் எடுத்துக் கூறி அவளைத் தன் நட்பிற்கு இசையுமாறு செய்யத் தோழியை வேண்டுகிறான். அவன் தலைவியை அணுகமுடியவில்லை. அவள் பெற்றோரிடமும் தன் விருப்பத்தைக் கூறமுடியவில்லை. ஆயினும் தன் காதலை நிறைவேற்ற வேண்டும்.

இந்நிலையில் தன் காதலை ஊரார் அறியும்படி செய்வதற்கு ஒரு வழி உண்டு. அது மடல் ஏறுதல். மடல் என்பது பனங்கருக்கால் குதிரை உருவம் செய்து எருக்கம்பூ மாலையை அணிந்து கொண்டு தலைவியின் பெயரை எழுதி தன் கையில் பிடித்தவாறு குதிரையை இழுக்கச் செய்வதாகும். அவ்வாறு தெருவில் போகும் போது, அவனது விசித்திரமான கோலத்தைக் கண்டு ஊரார் அதைப் பற்றி விசாரிப்பார்கள். அப்போது, தான் இன்னாரைக் காதலிக்கிறேன் என்று அவர்களிடம் கூறினால் அவர்கள் தலைவியின் பெற்றோரை கண்டு அச்செய்தியைக் கூறுவர்.

அந்தத் தலைவன் கூறுகிறான்; காதல் நாள் முழுதும் என்னை துன்புறுத்துகின்றது. 'காலையும் பகலும் கையறு மாலையும் ஊர்துஞ்சு யாமமும் என்று இப்பொழுது இடை தெரியின் பொய்யே காமம்''

இன்ன பொழுதுதான் காதல் வருத்துகிறது என்று கூறினால் அது இல்லை என்றாகும். அந்த வருத்தத்தைத் தாங்க முடியாமல் நான் மடல் ஏறினால், ஊர்மக்கள் தலைவியைப் பற்றி பேச நேரிடும். அவர்கள் அவளைப் பழிப்பார்கள். தலைவனை இவ்வாறு துன்புறுத்தினாள் என்று கூறுவார்கள். அவளுக்கு அந்தப் பழி ஏற்படுவதை நான் ஏற்க மாட்டேன்.

அவள் மீது பழிக்கு அஞ்சி, நான் என் உயிரைத் தாங்கி பிடித்துக்கொண்டு வாழ்ந்தால், என் நெஞ்சம் என்னைப் பழிக்கும். காதலுக்காக உயிரை விட்டான் என்று ஊராரும் பழிப்பர். ஆக அவள் பழிக்கும், என் பழிக்கும் அஞ்சி நான் உயிர் வாழ முடியாது. ''மாயென மழலொடு மருகித் தோன்றி தெற்றென துற்றனும் பழியே வாழ்தலும் பழியே'' என்று கூறுகிறான்.

தனக்குப் பழி வரக்கூடாது என்பதைவிடத் தலைவிக்குப் பழி ஏற்படக் கூடாது என்பதில் அதிக கருத்தாக இருக்கிறான்.

நட்பின் பெருமையை அன்றைய மக்கள் காதலின் அருமையை விட சிறந்ததாகப் போற்றினர். காதலும் ஒருவகை நட்புதான். ஆனால், அது மெய் ஒரு உணர்ச்சி, இன்றியமையாதததது. ஆனால், நட்பில் அன்பினை உள்ளத்தில் வைத்துப் போற்றலாம். உள்ளத்தால் நினைப்பது மட்டும் காதலாகாது. அதற்கு உடல்கள் ஒன்று சேர வேண்டும் என்று குறுந்தொகை தலைவருக்குக் கூறுகிறது. மற்றொரு தலைவியின் தோழி தலைவன், தன்னிடம் இரவு நேரத்தில் வந்து தலைவியைச் சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகிறான்.

அதற்கு அவள் இசையவில்லை. தலைவன் இரவு நேரத்தில் வந்தால்,, தலைவியின் வீட்டாரும் அதை அறிய நேரலாம். அது மட்டுமன்றி மழை பெய்து கொண்டிருக்கும் போது, மழைச் சாரலில் அருவி கொட்டும். அதன் தண்ணீரால் பாறைகள் வழுக்கல் உடையன ஆகும். அவற்றைத் தாண்டி, தலைவன் வந்தால் அவனுக்கு இடர்பாடுகள் உண்டாகும். இந்த நிலையில் அவன் இரவு நேரத்தில் வராமல் இருப்பதே நல்லது. பகலிலும், அவன் வர முடியாது. ஆக ஒரு போதும் அவன் வர முடியாத போது, காதலால் தலைவியைத் தழுவுவது என்பது இயலாத செயல்.

இந்த நிலையில் தோழி கூறுகிறாள், காதல் நிறைவேறா விட்டாலும் தலைவி, தலைவனோடு கொண்ட நட்பு குறையாது. அவள் காலமெல்லாம் கன்னியாகவே இருந்தாலும் அவள் மனதில் நட்பு இருந்துக் கொண்டே இருக்கும். ஆதலால் நட்பே மேல் என்று கூறுகிறாள்.

''காமம் ஒழிவது ஆயினும் யாமத்து
கருவி மாமழை வீழ்ந்தென அருவி
விடரகத்து இயம்பும் நாடஎம்
தொடர்பும் தேயுமே நின்வயி னானே''.

இவ்வாறு காதலைவிட நட்பையே போற்ற நினைக்கிறாள் என்பது இப்பாடலால் தெளிவாகிறது.

செந்தமிழ் இதழும் செம்மொழி அண்ணலும் !

புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

பொன்.பாண் டித்துரைத் தேவர்சீர்
பொன்தமிழ் போற்றிட மதுரையில்,
நன்பணி நான்காம் தமிழ்ச்சங்கம்
நானிலப் புகழுறத் தொடங்கும்போது
உயர்தனிச் செம்மொழி அண்ணலென்னும்
பரிதிமாற் கலைஞர் உரைசெய்தார்;
உயர்தனிச் செம்மொழி தமிழென்று,
உயர்வட மீன்நிகர் செந்தமிழின்
தலைஇதழ் கட்டுரை முன்வைத்தார் !
திகழ்தரு நூற்றிரண் டாண்டின்பின்,
நிலைசொலும் 'செம்மொழி' அறிவிப்பு,
நடுவண் அரசொடு தமிழ்அரசின்
விழைவினால் விளைந்தது; மகிழ்ச்சிவெள்ளம் !
விழைதகு தமிழக முதலமைச்சர்
தழைத்திடு மாண்பமை புகழ்க்கலைஞர்
பரிதிமால் கலைஞரின் நூல்களைநல்
நாட்டின் உடைமை ஆக்கிவைத்தார்;
நல்லதோர் 'பரிவை'ப் பகிர்ந்தளித்தார் !
ஏட்டினை எழுத்தினை அறிதமிழர்,
எழில்தமிழ் வளர்க்குமிப் பணிபுகழ்வார் !
'பழைமை பெருமை மிகுந்ததமிழ்,
பாரினில் புகழ்மிகு செம்மொழியே'
தழைத்திடு தமிழ்மணம் கொண்டுரைக்கும்
தனிப்புகழ் அறிஞர் மிகப்பலராம் !
செம்பொன் நிகர்பாண் டித்துரையின்
'செந்தமிழ்' முதல்இதழ் வழிஉரைத்த,
செம்மொழி அண்ணலை நினைவுகூர்வோம் !
'செந்தமிழ்' கருத்துகள் ஏற்றுயர்வோம் !
பாஸ்கர சேது பதிஅரசர்
படிப்புத விப்பணம், பொற்பதக்கம்,
மாசிலாக் கல்வி பெறப்பெற்ற,
மாப்புகழ் பரிதி பணிபுகழ்வோம் !

சங்க இலக்கியங்களில் மொழி சாராக் கருத்துப் பரிமாற்றம்

முனைவர் வீ. ரேணுகாதேவி
மதுரை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

தலைவன் பொருள் தேடும் பொருட்டுத் தலைவியை விட்டுப் பிரிந்து செல்கின்றான். குறித்த காலத்தில் திரும்பினான் இல்லை. தலைவி பிரிவாற்றாமையால் கண்ணீர் மல்குகின்றாள். காரணம் என்னவென்று கூறாமலேயே, தலைவியின் கண்ணீர் மல்கும் கண்கள் பிரிவாற்றாமையச் செவிலி, தோழி, நற்றாய் ஆகியோருக்கு உணர்த்துகின்றது. இதை அறிந்த அவர்கள் தலைவியின் துயரத்தை போக்க வழிவகை செய்கிறார்கள். இங்கு கண்ணீர் மல்குதல் செய்தல் குறியமாகச் செயல்பட்டு தலைவியின் துயரத்தை அவளைச் சார்ந்தவர்களுக்குச் செய்தியாக வெளிப்படுத்துகின்றது என்பதை,

சிறை பனி உடைந்த சேயரி மழைக்கண்
பொறை அரு நோயொடு புலம்பு அலைக் கலங்கிப் (குறுந். 86)

நாண் இல மன்ற எம் கண்ணே நாள் நேர்பு
சினைப் பசும் பாம்பின் சூல் முதிர்ப் பன்ன (குறுந். 35)

என்னும் குறுந்தொகை பாடல் வரிகள் வழி அறியமுடிகின்றது.

தலைவனைப் பிரிந்த தலைவி உணவு உண்ணாமலும், தன்னை அழகுபடுத்திக் கொள்ளாமலும், உடல் மெலிவுற்றும், கைவளையல் கழலுற்றும் காணப்பெறுகிறாள். இம்மாற்றங்கள் நிகழும் போது இம்மாற்றங்களுக்குரிய காரணத்தைத் தலைவி கூறாமலேயே தோழியால் அறிந்து கொள்ள முடிகின்றது. இங்கு கைவளையல் கழறல் செய்தல் குறியமாகச் செயல்படுகின்றது. இஃது,

கயிறுஎரி எருத்தின் கதழும் துறைவன்
வாராது அமையினும் அமைக
சிறியவும் ஊஈண்டு விலஞர்கை வளையே (குறுந். 117)

கைவளை நெகிழ்தலும் மெய் பசப்பு ஊர்தலும்
மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி (குறுந். 371)

என்னும் குறுந்தொகை பாடல் வரிகள் வழியாகப் பெறப்படுகின்றது.

செய்தல் குறியம் ஐந்து வகைகளாகப் பிரிக்கப்படுகின்றது. அவை,

1. சின்னம் (Emblem)
2. விளக்கிக் கூறுவது (Illustrators)
3. ஒழுங்குபடுத்துபவை (Regulators)
4. உணர்வுகளை வெளிப்படுத்துதல் (Affect displays)
5. ஒன்றிப் போதல் (Adaptors)

சின்னம் என்பது ஒரு குறியீடு. இக்குறியீட்டிற்கு மொழியும் உண்டு. சில சமயம் இரண்டும் இணைந்தும் செய்தியைத் தரும்.

சங்க இலக்கியங்களில் காந்தள் மலர் இத்தகைய குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தலைவன் தலைவியைக் காண வரும் போது காந்தள் மலருடன் வருகிறான். இதை அறிந்த தோழி, தலைவன் குறிஞ்சி நிலத்திலிருந்து தான் வருகிறான் என்பதை அறிந்து கொள்கிறாள் என்பதை,

கடில்தொழச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே (குறுந். 1)

என்னும் பாடல் வரிகள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். இங்கு காந்தள் மலர் குறிஞ்சி நிலத்தைக் குறிக்கும் சின்னமாகச் செயல்படுகின்றது.

உணர்வு வெளிப்பாடு

முகமானது உள்ளத்து உணர்வுகளை அப்படியே வெளிக்காட்டி விடும்

அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் (குறள்: 706)

கண்ணாடியானது தன் அருகில் உள்ளதை அப்படியே எதிரொளித்துக்காட்டும். அதுபோல் மனதில் உள்ள உணர்ச்சிகளை முகம் அப்படியே வெளிக்காட்டும். அதாவது உள்ளத்து உணர்ச்சிகளைக் கண்ணாடி போல் காட்டுவது முகம்.

முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான் முந்துறும் (குறள்: 707)

மனதில் தோன்றும் விருப்பு வெறுப்புகளை முன்னதாக வெளிப்படுத்துவது முகமாகும். இதுபோன்ற அறிவில் சிறந்தது உறுப்பு உடலில் வேறு உண்டோ. மொழி சாராக் கருத்துப் பரிமாற்றத்தில் செய்தியினை வெளிப்படுத்திய முகமும், கண்ணும் மிகச் சிறந்த குறியீடுகளாகப் பயன்படுகின்றன.

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின் (குறள் : 709)

பார்வையின் தன்மையை அறிய வல்லவர்களுக்குப் பிறரது கண்களே அவர்தம் வெறுப்பையும் நட்பையும் எளிதில் புலப்படுத்திவிடும். பாசத்தையும் பகையையும் கண்களே சொல்லிவிடும். வாய்ச்சொற்கள் தேவையில்லை.

கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல (குறள் : 1100)

விழிகளோடு விழிகள் இணைந்து காதல் உணர்வுகளைப் பரிமாறிக் கொள்ளும் போது பேச்சினால் பயன் இல்லை. கண்கள் பேசும் மௌன மொழியே காதல் மொழி. விழியாற்றில் முன் மொழியாற்றல் முடங்கிப் போய்விடும் என்று மொழி சாராக் கருத்துப் பரிமாற்றத்தின் வலிமையை வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

இக்கருத்து குறுந்தொகையிலும் காணப்படுகின்றது. தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்திருக்கும் பொழுது அவள் உடற் தோற்றத்தை நினைத்துப் பார்க்கிறான். மகிழ்ச்சி கொள்கிறான். அம்மகிழ்ச்சி தலைவனின் முகத்தின் வழியே வெளிப்படுகின்றது. பாங்கன் தலைவனின் மகிழ்ச்சியைத் தலைவன் கூறாமலேயே அறிந்து கொள்கிறான். அக மலர்ச்சியை முகம் வெளிப்படுத்துகிறது என்பதை,

ஆர நாறும் அறல் போற் கூந்தல்
பேர் அமர் மழைக்கண் மடந்தை
மூரல் முறுவலோடு மதைஇய நோக்கே (குறுந். 286)

என்னும் வரிகளால் உணரலாம்.

உடலின் மாற்றம், கண்தூங்க மறுத்தல், கண்ணீர் மல்குதல், வளையல் கழறல், உணவு உண்ணாமை போன்றவை ஒரு கருத்தை / செய்தியைக் குறிப்பால் பிறருக்கு உணர்த்துகின்றன. எனவே இக்குறியீடுகளின் வழிநிகழும் கருத்துப் பரிமாற்றம் மொழிசாராக் கருத்துப் பரிமாற்றத்தில் செய்தல் குறியங்கள் வகையில் அடங்கும்.

இன்றைய கால கட்டத்தில் கருத்துப் பரிமாற்றக் குறியங்களாக ஆடை அணிகலன்கள் பயன்படுவதைப் போல சங்ககால மக்கள் வாழ்விலும் கலைப்பொருட்கள் குறியங்களாகச் செயல்பட்டுள்ளன.

தலைவன் தலைவி உடன் போக்கின் போது, இடைச்சுரத்தில் கண்டோர் தலைவியின் காலில் அணிந்துள்ள சிலம்பினைக் கண்டு, இவளுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லையே, இந்த நல்லவர்கள் யார் என மக்கள் வினவுவதை,

வில்லோன் காலன கழலே தொடி யோள்
மெல் அடி மேலன சிலம்பே நல்லோர்
யார் கொல் அளியர் தாமே (குறுந். 7)

என்னும் பாடல் வரிகளின் வாயிலாக அறியலாம்.

இங்கு கால் சிலம்பினைக் கொண்டு தலைவிக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்னும் செய்தியைத் தலைவி கூறாமலேயே, இடைச் சுரத்தில் கண்டோரால் அறியப்படுகின்றது. இங்கு சிலம்பு கலைப்பொருள் குறியமாகப் பயன்படுகின்றது.

தலைவன் தலைவியின் இல்லற வாழ்வினைக் காணச் சென்ற செவிலித்தாய், அவளின் குடும்ப நிலையை நற்றாயிடம் எடுத்துரைக்கும் போது, உயர்ந்த தரமுள்ள ஆடையினைத் தலைவி உடுத்தியுள்ளாள் என்கிறாள். இதிலிருந்து நற்றாய் தன் மகள் செல்வச் செழிப்புடன் வாழ்கிறாள் என்பதை அறிந்து கொள்கிறாள் என்பதை,

முளி தயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழா அது உடீஇக்
(கலிங்கம் = ஆடை) (குறுந். 167)

என்னும் பாடல் வரிகளால் அறியமுடிகின்றது.

இங்கு உயர்ந்த ஆடை செல்வச் செழிப்பினை உணர்த்தும் கலைப்பொருள் குறியமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தேரையும், தேர்ப் படையையும் வைத்து அவற்றைப் பயன்படுத்துபவன் மன்னன் என அடையாளம் கண்டு கொள்கின்றனர் மக்கள். இக்கருத்து,

பொலம்படைப் பொலிலந்த வெண்தேர் ஏறிக்
கலங்குகடற் துவலை ஆழி நனைப்ப (குறுந். 205)

என்னும் பாடல் வரிகளால் பெறப்படுகின்றது.

இங்கு தேரும், தேர்படையும் மன்னனை அடையாளம் காட்டும் கலைப் பொருட் குறியங்களாகப் பயன்பட்டுள்ளன.

சங்கும், பறையும் மங்கள வாத்தியங்களாகும். இவ்வாத்தியங்கள் சமூகத்தில் உயர் நிலையில் உள்ளோரின் திருமண வைபவங்களில் பயன்படுத்தப்படும். இவ்வாத்திய முழக்கங்களைக் கேட்ட மக்கள் எங்கோ உயர்ந்தோர் இல்லத் திருமண விழா நடைபெறுகின்றது என்பதை அறிந்து கொள்கின்றனர் என்னும் செய்தியை,

பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்
தொல்மூதாலத்துப் பொதியில் தோன்றிய
நல் ஊர்க் கோசர் நன்மொழி போல (குறுந். 15)

என்றும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

தலைவன், தலைவி மற்றும் பிற மக்கள் பயன்படுத்தும் ஆடைகளும், அணிகலன்களும், மங்கள வாத்தியங்களான சங்கும், பறையும், வளையல்களும், சிலம்பும், தேரும், தேர்ப்படையும் மக்களின் சமுதாய நிலை, அவர்கள் பணி போன்றவற்றை வெளிப்படுத்தும் கலைப்பொருள் குறியங்களாகப் பயன்படுகின்றன. சொற்களின்றி பொருள்களே கருத்தினை / செய்தியினை வெளிப்படுத்துகின்றன.

மொழிசாராக் கருத்துப் பரிமாற்றத்திற்குப் புகைப்படங்கள், வரைபடங்கள், வண்ணக்கொடிகள், போன்றவை சித்திரக் குறியங்களாகப் பயன்படுகின்றன. சங்க இலக்கியங்களில் இவ்வகை சித்திரக் குறியங்களும் கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தலைவன் தான் விரும்பிய தலைவியை அடைய முடியாத நிலையில், பனைமடலில் குதிரை செய்து அக்குதிரையின் மேல் தலைவியின் படத்தை வரைந்து வீதியில் வலம் வருவான். இதைக் கண்ட மக்கள் அச்சித்திரத்தின் வழி அவன் உள்ளம் கவர் தலைவி யார் என அறிந்து, தலைவன் மடலேறுவதன் காரணத்தைத் தலைவியின் பெற்றோரிடம் கூறி இருவரையும் சேர்த்து வைக்க முயற்சி செய்வர்.

அறிகதில் அம்ம இவ் ஊரே மறுகில்
நல்லோள் கணவன் இவன் எனப்
பல்லோர் கூறயாம் நாணுகம் சிறிதே (குறுந். 14)
மா என மடலும் ஊர்ப் பூ எனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப (குறுந். 17)

இப்பாடல் வரிகள் மடலேறுதல் என்பது தலைவன் தன் தலைவியை அடைய முயல்கிறான் என்னும் செய்தி சித்திரக் குறியத்தின் வாயிலாக உணர்த்தப்படுகின்றது.

தலைவன் தன் விருப்பத்தைப் பிறருக்கு உணர்த்த மடலேறுதல் என்னும் சித்திரக் குறியத்தைப் பயன்படுத்துகின்றான். மடலேறுதல் ஆண்களுக்கு மட்டுமே, மங்கையர்க்கு இல்லை என்னும் செய்திகளை,

> *மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேர் மல்பு*
> *படல் ஒல்லா பேதைக்கென் கண்* (குறள்: 1136)
>
> *கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்*
> *பெண்ணின் பெருந்தக்கது இல்* (குறள்: 1137)

சங்க இலக்கியங்களில் காலமும், இடமும் கூட மொழிசாராக் கருத்துப் பரிமாற்றக் குறியங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதற்கான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. ஒவ்வொரு நிலத்திற்குரிய கருப்பொருள்களும், உரிப்பொருள்களும் மொழிசாராக் கருத்துப் பரிமாற்றக் குறியீடுகளே ஆகும்.

கருத்துப் பரிமாற்றம் என்பது என்ன? அஃது எவ்வாறு நடைபெற வேண்டும், செய்தி சொல்பவர், பெறுபவர் ஆகியோரின் தகுதிகள் என்ன? செய்தி எப்படிப் பட்டதாக இருக்க வேண்டும் என்பனவெல்லாம் சங்க இலக்கியங்களில் குறிப்பாக திருக்குறளில் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளது. 'சொல் வன்மை' மொழி சார்ந்த கருத்துப் பரிமாற்றம் பற்றி விவரிக்கின்றது. 'குறிப்பறிதல்' மொழி சாராக் கருத்துப் பரிமாற்றம் பற்றி விவரிக்கின்றது. காமத்துப்பால் பெரும்பாலும் மொழிசாராக் கருத்துப் பரிமாற்ற வகைகளில் ஒன்றான செய்தற்குறிய குறியீடுகளையும், அக்குறியீடுகளின் வழி பல செய்திகளையும் விவரித்துள்ளது. கண், முகம், உடல் என்னும் உறுப்புகளும் ஆடை, அணிகலன்கள், வளையல்கள், கொடிகள், மலர்கள், மடல் என்னும் பொருள்களும் மொழி சாராக் கருத்துப் பரிமாற்றக் குறியங்களாகச் சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளமை இரண்டு இலக்கியங்களிலிருந்தும் எடுத்துக் காட்டுகளைக் கூறி விவரிக்கப்பட்டுள்ளது. ஏனைய இலக்கியங்களையும் நுணுகி ஆராய்ந்து பார்ப்பின் கருத்துப் பரிமாற்றம் பற்றிய செய்திகள் பல கிடைக்கும். அவற்றிலிருந்து மேலைநாட்டுக் கோட்பாடுகளைக் கொண்டு நம் மொழியையும், இலக்கியங்களையும் ஆராயும் முறைமையைத் தவிர்த்து, நமக்கான, நம் மொழிக்கான, நம் இலக்கியங்களுக்கான கோட்பாடுகளை உருவாக்கிக் கொள்ளலாம். அதற்கான சிறு முயற்சியே இவ்வாய்வுக் கட்டுரை.

சங்க இலக்கியத்தில் பூ உதிர் காட்சிகள்

முனைவர் இ.கி. இராமசாமி
மதுரை

அறிமுகம்

சங்க இலக்கியம் பயில்வோர் அதில் வரும் இயற்கைக் காட்சிகளை ஆழ்ந்து எண்ணிப்பார்த்து என்றும் இன்புறலாம். அக்காட்சிகளை எவ்வாற்றானும் புறக்கணிக்க இயலாது என்பார் மு.வ. (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, 2006, ப. 47) சங்க இலக்கியத்தில் மனித அகவாழ்க்கைக் கூறுகளைச் சொல்லுமிடத்து அவற்றை விளக்கிக்காட்ட எழிலார்ந்த இயற்கைக் காட்சிகளைச் சுட்டியுள்ளனர். இயற்கை நிகழ்வுகளில் மனமொன்றி அவற்றைச் சொல்லோவியங்களாகத் தீட்டியுள்ளனர். அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல் என்று பூவின் பருவங்களையும், வண்ணங்களையும், பார்த்து அவற்றின் அழகை விளக்கியதோடு அப்பூக்கள் உதிர்கின்ற காட்சிகளை - நொடிப்பொழுதில் நிகழும் காட்சிகளை உற்றுநோக்கித் தாம் முன்னரே கண்டுகளித்த இயற்கை நிகழ்ச்சிகளோடு உவமைப்படுத்திக் காட்டியுள்ளனர். பூ உதிர் காட்சிகளெல்லாம் பொருட்பிரிவு, உடன்போக்கு ஆகிய சூழ்நிலைகளில் (situations) வழியிடைக் காட்சிகளாகச் சித்திரிக்கப் பெற்றுள்ளன.

உதிர்கின்ற பூக்களைப் பெய்கின்ற மழை, மழையுடன் விழுகின்ற ஆலங்கட்டி, சிதறும் முத்துக்கள், எரிந்து விழுகின்ற சுடர் எனப் பல்வேறு காட்சிகளுடன் ஒப்பிட்டு உரைத்துள்ளனர்.

மழையும், ஆலங்கட்டி மழையும்

புதுமழை பொழியும்போது சிறுசிறு பனிக்கட்டிகளும் சேர்ந்து விழுவதுண்டு. அதனை ஆலங்கட்டி மழை என்கிறோம். இது அரியதொரு காட்சியாகும். எப்போதாவது காணக்கிடைக்கும் இந்தக் காட்சியைச் சங்கப்புலவர்கள் அணிநயத்துடன் வருணித்துள்ளனர். சங்க இலக்கியத்தில் சுட்டப்பெறும் 'மராஅம்' என்பதற்கு மராமரம், மரவம், கடம்பு என்று பொருள். கடம்பு என்பது செங்கடம்பு, வெண்கடம்பு ஆகிய இரண்டு வகையினையும் குறிக்கும் பொதுச்சொல்லாகும். கடப்பம் பூவின் வண்ணத்தைக் கொண்டு இடத்திற்குத் தக்கவாறு செங்கடம்பு,

வெண்கடம்பு என்று பகுத்துக் கூறிச் செல்லுகின்றனர். வெண்கடம்ப மரத்திலிருந்து பூக்கள் உதிர்வதைப் பெய்கின்ற வெள்ளிய மழைக்கு உவமையாக்கியுள்ளார் கல்லாடனார். மழையுடன் விழுகின்ற ஆலங்கட்டிக்கு உவமை கூறியுள்ளார் மாமூலனார். அவரே முருங்கைப்பூ உதிர்வதையும் ஆலங்கட்டியுடன் பெய்யும் மழைக்கு உவமையாக்கியுள்ளார். இலுப்பைப்பூ உதிர்கின்ற காட்சியை மழையுடன் விழுகின்ற ஆலங்கட்டிக்கு உவமையாக்கியுள்ளார் கல்லாடனாரும், கந்தரத்தனாரும்.

வெண்கடப்பம்பூ

நீரின்றிக் காய்ந்துபோன பாலை நிலத்தின் கொடுமையைச் சொல்லவந்த கல்லாடனார், காற்றால் உதிர்கின்ற வெண்கடப்பம்பூக்களைப் பார்த்து மழை பெய்வதாகக் கருதி நீர்வேட்கை கொண்ட யானை அந்த மரத்தருகே சென்று சுழன்றது என்கிறார்.

''நிரைகால் ஒற்றலின் கல்சேர்பு உதிரும்
வரைசேர் மராஅத்து ஊழ்மலர் பெயல்செத்து
உயங்கல் யானை நீர்நசைக்கு அலமர'' (அகம். 199 : 2-4)

உதிர்கின்ற வெண்பூக்களை மழையென நினைத்து அப்பூக்களினூடே யானை சுழன்றாற் போலத் தலைவன் பொய்யாகிய பொருள்மீது ஆசைகொண்டு திரிகின்றான் என்பது பாட்டின் இறைச்சிப்பொருள்.

மாமூலனார் ஆலங்கட்டி மழையைக் கண்டு மகிழ்ந்து அதன் குளிர்ச்சியை நுகர்ந்திருக்கிறார். வெண்கடப்பம்பூக்கள் உதிர்கின்ற காட்சியையும் உற்றுநோக்கியிருக்கிறார். வெண்கடப்பம்பூக்கள் உதிர்கின்ற காட்சி அவருக்கு ஆலங்கட்டி மழை பொழிவது போலத் தோன்றியிருக்கிறது.

''சுதை விரிந்தன்ன பல்பூ மராஅம்
....
தண்மழை ஆலியின் தாஅய்'' (அகம். 211:2,5)

சுதை என்பது சுண்ணாம்பு சுடுதற்குரிய ஒருவகைச் சிப்பி. அச்சிப்பியை நீற்றறையில் வைத்துச் சுடும்போது அது வெண்மையான மலர் போலத் தோன்றும். அச்சிப்பி இங்கு வெண்கடப்பம்பூவுக்கு உவமையாகச் சொல்லப்பட்டது என்கின்றார் பொ.வே.சோமசுந்தரனார் (அகம் - உரை, 1973, ப.290)

முருங்கைப்பூ

அம்மூவனாருக்கு உதிர்கின்ற முருங்கைப்பூக்களும் ஆலங்கட்டி மழை பெய்வதுபோலத் தோன்றுகின்றது.

''புன்கால் முருங்கை ஊழ்கலி பல்மலர்
தண்கார் ஆலியின், தாவன உதிரும்'' (அகம். 101 : 15-16)

முருங்கைமரம் வலுவற்றது. அதனால் புன்கால் முருங்கை என அடைமொழியுடன் அம்மரத்தினைச் சுட்டினார். முருங்கையின் கிளைகள் ஆடுவதால் அதன் பூக்கள் மிகுதியாகக் கொட்டுகின்றன என்பதைக் குறிப்பால் உணர்த்தியிருக்கிறார்.

பெருங்காற்று காரணமாக உதிர்ந்த முருங்கைப் பூக்கள் கடல் அலைகளால் உண்டான வெண்மையான நுரைபோலப் பரவிக்கிடந்தன என்றும் மாமூலனார் மற்றொரு பாட்டில் சித்திரித்துள்ளார் (அகம். 1)

இலுப்பைப் பூ

சங்க இலக்கியத்தில் பேசப்படும் இருப்பைமரம் இக்காலத்தில் இலுப்பைமரம் என்று வழங்கப்படுகிறது. இலுப்பைப்பூ வெண்மையானது. கல்லாடனாருக்கு உதிர்கின்ற இலுப்பைப்பூக்கள் ஆலங்கட்டிகள் வீழ்வன போலத் தோன்றுகின்றன. இலுப்பைப்பூவின் நிறமும் மென்மையும், வெண்ணெய் போன்று இருந்தனவாம். காற்றடிக்கின்ற பொழுது இலுப்பைப் பூக்கள் காம்பினின்று கழன்று ஆலங்கட்டிபோல விழுந்து சிதறினவாம். அக்காட்சியினை,

''இழுதின் அன்ன தீம்புழல் துய்வாய்
உழுதுகாண் துளைய ஆகி, ஆர்கழல்பு
ஆலிவானின் காலொடு பாறி'' (அகம் 9:5-7)

என்று பாடியுள்ளார் கல்லாடனார்.

பொரிந்த அடியையும் முருடுகளை உடைய அரையினையும் கொண்ட இலுப்பை மரத்தின் கூம்பிய குலையிலிருந்து உதிர்ந்த துளைகளையுடைய இலுப்பைப் பூக்கள் ஆலங்கட்டிகளை ஒத்திருந்தன என்று கந்தரத்தனாரும் பாடியுள்ளார்.

''.......................பொரிகால்
பொகுட்டரை யிருப்பைக் குவிகுலைக் கழன்ற
ஆலி யொப்பின் தூம்புடைத் திரள்வ'' (அகம். 95:5-7)

சிதறும் முத்துக்கள்

கல்லாடனாருக்கும் கந்தரத்தனாருக்கும் ஆலங்கட்டி விழுவது போன்று தோன்றிய இலுப்பைப்பூக்கள் எயினந்தை மகனார் இளங்கீரனாருக்குச் சிதறும் முத்துக்கள் போலத் தோன்றியுள்ளன.

''பூத்த இருப்பைக் குழைபொதி குவியினர்
கழல்துளை முத்தின் செந்நிலத்து உதிர'' (அகம். 225:11-12)

நூலிலிருந்து கழன்றுவிழும் துளையுடைய முத்துக்களைப் போலத் துளையுடைய இலுப்பைப் பூக்கள் விழுந்து சிதறினவாம். இது நிறம் பற்றி மட்டும் வந்த உவமை அல்ல. வடிவமும் உள்அமைப்பும் பற்றி வந்த உவமையாகும். இலுப்பையின் அல்லி இதழ்கள் இணைந்து குழல் வடிவத்தில் இருப்பதால் அவை உதிரும் போது அல்லிவட்டம் முழுமையாகக் கழன்றுவிழும். பூவின் இருபுறத்திலும் துளை இருக்கும். நூலைப்போல சூற்பை காம்பில் நீட்டி நிற்கும். முத்துமாலையிலிருந்து உதிரும் முத்தின் இருபுறமும் துளை இருப்பது போலவே, உதிருகின்ற வெண்ணிற இலுப்பைப் பூக்களிலும் துளை இருக்கும். ஆதலால் 'கழல்துளை முத்து' என்று குறிப்பிட்டார் இளங்கீரனார்.

இலவம்பூ

இலவம்பூக்களை எரிகின்ற நெருப்புக்கு உவமையாகச் சொல்லிய இலக்கியக் காட்சிகள் பலவுள்ளன. (கலி. 33, அகம். 245, ஐங்குறு. 338, ஐங்குறு. மிகை. 33) இப்பொழுது காணப்படும் இலவம் வேறு; சங்க இலக்கியம் சுட்டும் இலவம் வேறு.

''இலையில் மலர்ந்த ஓங்குநிலை இலவம்
மலையுறு தீயின் சுரமுதல் தோன்றும்'' (ஐங்குறு. 338:2-3)

என, இலவ மரங்கள் செந்நிறப் பூக்களைப் பூத்துள்ள காட்சியை, மலைமீது எரிகின்ற நெருப்புக்கு உவமையாக்கியுள்ளார் ஓதலாந்தையார். அவரே இலவம்பூக்கள் நெருப்பு வீழ்வது போல உதிர்ந்தன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''எரிப்பூ இலவத்தூழ்கழி பன்மலர்'' (ஐங்குறு. 368:1)

என்பது அவர் கையாண்ட சொற்றொடர்.

அவரே பிறிதோர் இடத்தில் முட்களுடைய அடிப்பகுதியைக் கொண்ட இலவமரத்தின் பூக்கள் உதிர்கின்ற காட்சி, இடியுடன் கூடிய நெருப்பு தரையில் விழுவதைப் போன்று தோன்றியது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''முள்ளரை இலவத்து ஒள்ளிணர் வான்பூ
முழங்கால் அசைவளி எடுப்ப வானத்து
உருமுப்படு கனலின் இருநிலத்து உறைக்கும்''
(ஐங்குறு. 320:1-3)

சுடர்

திருவிழாக் காலங்களில் நெய் பெய்யப்பெற்று எரியும் தீப்பந்தங்களிலிருந்து விழுகின்ற சுடர்ப்பொரிகள் போல இலவம்பூக்கள் உதிர்ந்தன என்று பாடியுள்ளார் கயமனார்.

''நீள் அரை இலவத்து ஊழ்கலி பல்மலர்
விழவுத் தலைக்கொண்ட பழவிறல் மூதூர்
நெய் உமிழ்சுடரின் கால் பொர'' (அகம். 17:18-20)

மகட்போக்கிய செவிலி கூற்றாக வரும் இப்பாடல், திருவிழா நடக்கின்ற ஊரில் இருளைப் போக்கத் தீப்பந்தம் பிடிப்பர் என்பதையும், அதில் நெய் பெய்கின்றபொழுது எரிசுடர் விழும் என்பதையும் விளக்கிக் காட்டுகின்றது. அப்படி எரிசுடர் விழுவதைப் போல இலவம்பூக்கள் உதிரும்படியான வழியிடைக் காட்சிகளைக் கண்ட தலைமக்கள் மீண்டும் வந்து நாடறிய நன்மணம் புரிந்து கொள்வர். அவர்களுடைய காதல் வாழ்க்கையில் இருள் நீங்கி ஒளி பிறக்கும் என்பது இதன் உட்பொருள்.

கருத்துரை

வெண்கடப்பம்பூ, முருங்கைப்பூ, இலுப்பைப்பூ, இலவம்பூ ஆகியன உதிர்கின்ற காட்சிகளை ஆலங்கட்டி மழை, நெருப்புச்சுடர் ஆகியவற்றோடு ஒப்பிட்டுரைத்துள்ள சங்கச் சான்றோர் தனித்திறன் போற்றுதற்குரியது. தாம் காணுகின்ற ஓர் இயற்கை நிகழ்ச்சியைத் தாம் முன்னரே கண்ட மற்றோர் இயற்கை நிகழச்சியோடு ஒப்பிட்டுக்காட்டித் தங்கள் புலமையை உள்ளதன் நுணுக்கமாகப் புலப்படுத்தியுள்ளனர். தமிழ்ச் செம்மொழிக்கு அரணாக இருந்து உரமூட்டி வளர்த்துள்ளனர். இல்பொருள் உவமையை விடுத்து இயற்கை அணியால் இலக்கியத்தை வளப்படுத்தியுள்ளனர்.

* * *

திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ்

பேரா. நெல்லை. ந. சொக்கலிங்கம்
மதுரை

தோரணவாயில்

பரிதிமாற்கலைஞரின் ஆசிரியராக விளங்கியவர் மதுரையம்பதி மகாவித்துவான் சு. சபாபதிமுதலியார் (1837-1898) ஆவார். அப்புலவர் பெருமகனார் அருந்தமிழ்ப் புலமை நலத்துடன் ஆக்கிப்படைத்த நூல் 'திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ்' ஆகும். ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய இலக்கணநெறியோடு இயற்றப்பட்டது இந்நூல். அன்றைய மதுரை மாவட்டத்தில் செழிப்புடன் விளங்கி, இன்று தேனி மாவட்டத்துள் அடங்கும் பெரியகுளத்தில் வீற்றிருக்கும் முருகப்பெருமானைப் போற்றிப் பரவும் பாங்கில் அமைவது இப்பிள்ளைத்தமிழின் இலக்கியச் செழுமையை வெளிப்படுத்தும் போக்கில் அமைவது இக்கட்டுரை.

நூலாசிரியரின் இளமையும் ஏற்றமும்

தஞ்சை மாவட்டம் நன்னிலத்திற்குட்பட்ட குமாரமங்கலம் என்ற ஊரினரான சுந்தரலிங்க முதலியாருக்கும், அட்டாவதானம் நீலாம்பாள் அண்ணிக்கும் மைந்தனாகத் தோன்றியவர் மகாவித்துவான் சு. சபாபதி முதலியார். இவர் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கியதோடு பன்மொழிப் புலமையும் வாய்க்கப் பெற்றிருந்தார். சபாபதி முதலியார் சோழவந்தானைச் சார்ந்த ருக்மணி என்ற பாப்பம்மாளை வாழ்க்கைத்துணைநலமாக ஏற்றுக்கொண்டார்.

புலமை வீறுடைய நம் சபாபதி முதலியார் பெரியகுளத்தில் ஆசிரியராகப் பணியாற்றியவர் ஆவார். இவர் பெரியகுளம் வடகரை ஜமீன்தார், வள்ளல் வி. இராமபத்திரநாயுடு அவர்களின் பேருதவியினால் 'திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ்' நூலை இயற்றினார். இந்நூல் 1863-ஆம் ஆண்டில் முதற்பதிப்பாக வெளியிடப் பெற்றது. பரிதிமாற்கலைஞரும் சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியரான சின்னச்சாமிப் பிள்ளை என்பாரும் இப்புலவர் பெருமானிடம் தமிழ் கற்ற தகைமையாளர் ஆவர்.

மகாவித்துவான் சபாபதி முதலியார் மதுரைச் சொக்கநாதப் பெருமான் மீது யமகம், மடக்குவாய்ந்ததாகவும், சிலேடையாகவும், வெண்பாக்கள் புனைந்து 'மதுரை மாலை' என்ற நூலை 1867-இல் இயற்றித் தமிழுக்கு அணி செய்துள்ளார். திருப்பரங்குன்றம் முருகப்பெருமான் மீது இவர் 'திருப்பரங்குன்றத்தந்தாதி' பாடியுள்ளார். மேலும் இவர் திருமறைக்காட்டு இறைவன் மேல் 'வேதபுரீஸ்வரர் அந்தாதி' ஒன்றும் பாடியுள்ளார். இப்புலவர் பெருந்தகை மதுரை நேட்டிவ் காலேஜ் என்னும் கல்விநிலையத்தில் ஆசிரியராகவும் பணியாற்றிப் பைந்தமிழ்த் தொண்டு செய்துள்ளார். சங்க இலக்கியங்களைப் பல மாணவர்களுக்கும் கற்பித்த பெருமை இவருக்குண்டு. இவர் ஞானத்தின் தன்மையை 'மெய்ஞ்ஞானபானு' என்னும் நூலில் விளக்கி 1891-ஆம் ஆண்டில் அதனை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் இயற்றியுள்ள மறைசையந்தாதிக்கு இவர் ஓர் உரையும் இயற்றியுள்ளார் என்பது தெரியவருகின்றது. இவர் தம்முடைய 61-ஆம் ஆண்டில் புகழுடம் பெய்தினார்.

இவருடைய புலமைவளத்தைப் புலவர் சண்முகம் பிள்ளை என்பார்,

"சொல்நயமும் பொருள்நயமும் துதைந்தபல அணிநயமும்
எந்நயமும் இனிதுஒங்க இயல்வல்லோர் நனிகூறும்
பன்னிரு குற்றமும் பழகுஇன அரசங்குஒழிப்பதி
தன்னிகரில் ஒருபிள்ளைத் தமிழ் அலங்கல் சாத்தினனால்"

என்று தம் சிறப்புப்பாயிரத்துள் கூறிப் போற்றுவர்.

புலவர் பெருந்தகை சபாபதி முதலியாரின் அருமை மாணவர் பண்டிதர் சின்னச்சாமிப் பிள்ளையோ,

"மாதவரும் உளம்விழையும் ஆதவ நல்லொழுக்கினன்
சீர் ஆதவனின் மாணவர் தம்மகத்து இருளை அகற்றியொளி
ஏதமறவரும் தூயோன் எந்தை எழில் திருநாமம்
தீதறவே புனைந்து இலங்கு செம்மல் சபாபதிக்குரிசல்"

என்று வியந்துரைப்பார். இவரியற்றியுள்ள இப்பிள்ளைத் தமிழ் நூலைத்தம் காலத்திலேயே (1863) பதிப்பித்து இவர் வெளியிட்டுள்ளார். பின்னர் இப்புலவரின் 107-ஆவது குரு பூசையின் அன்னார் வழிவந்த மேலமாசி வீதி, 'மதுரை மாலை இல்லம்', திரு. இர.சிவசண்முகம் முதலியார்

அவர்கள் பிள்ளைத்தமிழ் மற்றும் மதுரை மாலை ஆகிய இரு நூல்களின் சில பாடல்களைத் தொகுத்து 14.06.2005-இல் கையடக்க நூலாக வெளியிட்டார்.

'திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ்' நூலைக் கண்டுபடித்துத் தகுந்த உரையுடன் 2009-ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாக முனைவர் பா. சிங்காரவேலன் (மேலூர் அரசுக் கல்லூரி) என்பார் பதிப்பித்துள்ளார் என்பது இவண் குறிப்பிடத்தக்க ஒன்று. புலமைச் செழுமையும் வளமும் நிறைந்த இப்பிள்ளைத்தமிழ் நூலின் சிறப்புகளை ஓரளவு பருந்துப் பார்வையாக கண்டு சுவைப்போம்.

திருக்குளந்தைச் சிறப்பு

பாண்டி நாட்டுப் பழம்பதியான ஊர் பெரியகுளம். வராக ஆறு ஓடி வளம் சேர்க்கும் ஊர். இவ்வூரின் நடுவே ஓடுகிறது இந்த ஆறு. இதனை ஒரு தெம்மாங்குப் பாடல்,

''இரண்டு பக்கம் ஊரு நடுவே ஆறு
மூணு தேரு வந்து பாரு''

என்று போற்றும். அருணகிரிநாதர் இவ்வூர் வடிவேலன்மீது திருப்புகழ்ப் பாடல் ஒன்று பாடிச் சிறப்பித்துள்ளார். மலையும் மருதமும் செறிந்த நீர்வளம் நிறைந்த இப்பெரியகுளத்தில் குடிகொண்டிருக்கும் வடிவேலன் வரம் அருளிக் காக்கும் பேறுடையது இவ்வூர். இதன் வளத்தையும் வனப்பையும் புலவர் சபாபதி முதலியார் இலக்கியநயந்தோன்ற இனிது கூறுவார் பின்வருமாறு :

''செய்யவளம் ஓங்கு குளந்தைப்பதி'' (18)
''ஒரு வராகநதித்
தெள்ளும் புனல்கொள் குளந்தைப்பதி'' (19)
''குன்றம் வளைந்த திருக்குளந்தை ''(38)
'' யம் திரியும் குளந்தை நகர்'' (73)
''......... சிறுமகளிர்
தமரொடு ஒன்றி விளையாடும்
வியனார் மறுகங் குளந்தைநகர்'' (22)
''விருதுக் கொடியார் எயில் குளந்தை'' (23)
''பொழில்சூழ் குளந்தை'' (24)
''செந்நெல் தடியுடை ஓங்கு குளந்தைப்பதி'' (30)
''சலசத் திரல் நீர் குலவு குளந்தை''(28)

இவ்வாறு ஆற்றுவளமும் பொழில் வளமும் நிறைந்து காணப்படும் பெரியகுளத்தில் ஒரு காட்சியைக் கற்பனை நயம் தோன்ற அமைக்கிறார் புலவர் சபாபதி முதலியார்.

மேகக் கூட்டம் மலைமேல் பரந்து படர்ந்தது. நீண்ட கொம்புகளை உடைய எருமைகள் அங்குள்ள குளத்தில் இறங்கின. அப்போது அவற்றுக்குத் தம் கன்றுகளின் நினைப்பு வரவே தம் மடியிலிருந்து அங்கேயே பாலைச் சொரிந்தன. அப்படிச் சொரிந்த பாலை அக்குளத்தில் உள்ள அன்னப் பறவைகளின் குஞ்சுகள் அருந்தி இன்புற்றன. பாலருந்திப் பசியாறிய மயக்கத்தில் நீரலைகள் அலைக்க அக்குஞ்சுகள் தாமரை மொட்டுகளிலே உறங்கினவாம். அங்கே வண்டினங்கள் ரீங்காரம் செய்வது அன்னப்பறவைகளுக்குத் தாலாட்டுப் பாடுவது போன்று இருந்ததாம். இதோ அந்தக் கற்பனை புலவரின் சொற்களிலே :

"நீரார் மேக சாலங்கள்
ஒருங்கே நிவந்தோர் வரைமுடிமேல்
நிலவி இழிந்தது எனக்கோட்டின்
ஏறி இறங்கு நெடுமருப்புக்
காரார் மேதி தடம்புக்குக்
கன்றை யுள்ளிப் பொதி பாலைக்
கவின் ஆரனப்பால் அருந்திப்பூங்
கமலத் தொட்டில் கண்வளர
வேரார் இலைமேல் உயர்ந்து பச்சை
எழில் மேற்கட்டி எனவிளங்க
எழும் தண்அலைகள் அசைப்ப வண்டின்
இனந் தாலாட்டும் செழும்பணை....." (71)

புராணச் செய்திகள்

பொதுவாகப் புலவர்கள் பழம்புராணக் கருத்துக்களைத் தங்கள் படைப்புகளிலே கூறிச் செல்வர். முருகனைப் பற்றிப் பேசும் இப்பிள்ளைத்தமிழில் சபாபதி முதலியார் நிறையவே புராண மரபுச் செய்திகளைக் கூறிப் போகிறார். அவற்றுள் சில வருமாறு :

பாற்கடலைக் கடைந்தபோது நஞ்சு வந்தது. அந்த நஞ்சைச் சிவபெருமான் உண்டார்; அப்படி நஞ்சை உண்டவன் மைந்தனே (26) என்கிறார் பிள்ளைத்தமிழ் ஆசிரியர். மந்திர மலையதனை மத்தாகவும்

வாசுகியை நாணாகவும் கொண்டு பாற்கடல் கடைந்தமையினை இவர் மேற்கண்ட பாடலில் கூறுவார்.

சிவபெருமான் திரிபுரம் எரித்தமையினை,

> *''சுவர்க்கிரண பானுமதி சுற்ற ஆடகமரைக்*
> *காயிற்கவின் கொண்டு எழும்*
> *கனகவலையைப் புரம் அழிக்க வில்வணக்கி'' (35)*

எனப் புலவர் கூறுவதிலிருந்து தெளியலாம். நான்முகன் தலையில் முருகப்பெருமான் குட்டிய செய்தியை,

> *''மூலப் பெரும்பழைய பொருள் என்பது அறியாமல்*
> *முந்தியே குழியவனை நீ*
> *முன்வரவு அழைத்தவன் தலைகுழி தரக்குட்டும்'' (37)*

என வருவதால் உணரலாம். தேவர்களுக்கு அடைக்கலம் அளித்துக் காத்தவன் ஆறுமுகன் (40). பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய சந்திரனே உன் தேய்வைச் சொல்லி முருகனிடம் நீ வேண்டினால் அவன் அருள்வான் (65) என்று புலவர் அம்புலிப் பருவத்தில் வேண்டுவார். கடல் நடுவே கிரவுஞ்ச மலையாக நின்ற சூரபதுமனைப் பிளவுபடுமாறு செய்த முருகப் பெருமானின் அருட்செயலை,

> *''கார்க் குன்று தொளைபடக் கடல்சுவற உலகம்*
> *கவிழ்க்கு மா இரு கூறதாய்க்*
> *காணப் பிளப்ப'' (67)*

என வரும் அம்புலிப்பருவப் பாடல் அடி தெளிவுறுத்தும். இவ்வாறு இப்பிள்ளைத்தமிழ்ப் பாடல்களில் பற்பல இடங்களில் பழம்புராண மரபுகளை இடைமிடைந்து கூறி இப்புலவர் தம் புலமை வளத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

கற்பனை நயம்

முருகப் பெருமானின் திருமுகத்தில் அரும்பிய முறுவலைக் கற்பனை நயந்தோன்றச் சபாபதி முதலியார் பின்வருமாறு கூறுவார் :

> *''கதிர்மதி முகமதில் இளநகை நிலவு எழ*
> *விழிகள் கழிப்படைய....'' (29)*

முழுத்திங்கள் போல ஒளிவீசும் முருகனுடைய முகத்தில் அரும்பும் இளநகைக்குப் பிறை நிலவை உவமை கூறியுள்ளமை இங்கே கருதத்தகும்.

தாமரைப் பொய்கையில் தாமரையில் தங்கியுள்ளன அன்னங்கள்; நீரலைகளினால் தாமரை மலர்கள் ஆடின; அதனால் அன்னங்களும் ஆடுகின்றனவாம். இது கழைக்கூத்தில் நடன மங்கை ஒருத்தி ஆடுதல் போல உள்ளதாம். தாமரை மலர்கள் இலைச்சுருளாகிய பட்டாடையைப் பரிசளிக்கும் பாங்குடைய திருக்குளந்தையாம். இது சப்பாணிப் பருவப்பாடல். அப்பாடல் இதோ :

''வாவி இடை வனசத்தின்
நீள் ஆளத்து உறுங்காயின் மேல்நின்று கழையின் மிசை
நாடகக் கூத்தி ஏய்ப்ப
நளின அன்னங்களாடப் பெரிது மகிழ்வுற்று
பாளத்து முத்தளித்து அணிமரை இலைச் சுருள்
பட்டும் அடி பரிசளிக்கும்
பல்வளக் கழனிக் குளந்தை'' (31)

முருகப்பெருமானின் மயில்மீது ஏறிவரும் போது உலகில் நிகழ்கின்ற மாற்றங்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்துவார் பிள்ளைத்தமிழாசிரியர்.

''எண்திசை யானைகள் பிளிறிட நாகம்
இரிந்திட இலகுபுவி
ஏழையின் மேனி பிளப்பச் சேடனது
இலகுடல் அங்கம் பங்கு
கொண்டலம் வரதையூர் தரும் ஒரு துரை
கொட்டுக சப்பாணி'' (39)

எட்டுத்திக்கு யானைகள் பிளிறினவாம்; ஆதிசேடன் நடுக்குற்றதாம்; நிலமகளின் உடல் பிளவுபடுமாறு மயில் மீது முருகப்பெருமான் வந்தாராம். இவ்வாறு தற்குறிப்பேற்றமும், உயர்வு நவிற்சிகளும் விரவி வரச் சபாபதி முதலியார் இப்பிள்ளைத்தமிழ் நூலை யாத்துள்ளார்.

பிற சிறப்புகள்

முருகப்பெருமான் ஆறுபடை வீடுகளிலும் குன்றுதோறும் குடிகொண்டிருப்பவன். அத்திருத்தலங்களை மகாவித்துவான் தாமியற்றியுள்ள பிள்ளைத்தமிழில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

''வளர்ஏரகம் செந்தில் பழனி
அல்கு பெருமைப் பரங்குன்றம்
அணிகொள் பழமுதிரும் சோலை
அமர்ந்தும் அளவில் குன்று

ஆடி அளகைதனைச் சிரிக்கும்
செல்வக் குளந்தை நகர்க்குள் வரும்
சேயே சிற்றில் சிதையேலே'' (75)

என்பதே இப்பாடலாகும். குழந்தை கண்ணயர்தலைக் குறிக்கும் அழகிய தமிழ்ச்சொல் 'கண்வளர்தலாகும்'. தாலப்பருவப் பாடல் ஒன்றில் புலவர் சபாபதி முதலியார் இச்சொல்லைப் பயன்படுத்தித் தம்முடைய சொல்லாட்சித் திறத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

''வண்ண மணித்திரள் குயில்தரு தொட்டில்
வளர்த்திக் கைம்மலரின்
வாள்விடு பொற்சங்கிலிகள் அசைப்ப
மலர்க்கண் வளர்ந்து அருள்வாய்.'' (29)

முருகப்பெருமான் சப்பாணி கொட்டும்போது நான் மறைகளும் பறையறை செய்யுமாம். இதோ அது :

''சதுர்மறைகள் பறையறை செய் அறுமுகத்து ஒருமுருக
சப்பாணி கொட்டியருளே!'' (36)

19, 20- ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர் பெருமக்கள் அளபெடைகளைப் பயன்படுத்துவது அரிதாக உள்ளது. இவ்வகையில் மகாவித்துவான் சபாபதி முதலியார் அளபெடைகளைப் பயன்படுத்தித் தமிழ் இலக்கண நுட்பங்களைப் போற்றியுள்ளார்.

''கார் மேக அங்கம் இயன்கடல் துறை புகூஉப்
புனல் வெள்ளி கைக்கொண்டு எழீஇ'' (34)

வடிவேலனைச் செங்கீரை ஆடியருளும் வண்ணம் பாடும் பாடலில் 'ஆட' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரு நயத்தை ஏற்படுத்துகின்றது.

''ஒளிர்மணி பதித்தமுடி வெயிலாட வங்காதின்
உயர்குழைகள் ஊசலாட
ஊற அமுதவாயின் நகை ஒளியாட உதயகிரி
உற்ற பானுவை நிகரவே
மிளர் புயத்திடுவாகு வலயமாடக் கதிர்கள்
வீசுகங் கணமாடிட
வியன் உரம் அதில் அரிமதாணியாடிட விடையின்
மிக்க கிண்கிணிகளாட

நளிர்கழலின் ஊர்புரம் ஒலித்தாட அரமகளிர்
நடமாடக் களிப்பான்
நால் நிலத்து அரியஅறம் நட்மாட மிகுநலிவு
நாட்டுகலி தடம் ஆடவே....." (14)

இப்பாடலைக் காது குளிரக் கேட்கும்போது அருணகிரிநாதரின்,

"அதல சேட னாராட மேரு மீதாட
அபினகாளி தானாட - அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையிலேறு வாராட
அருகு பூத வேதாள - மலையாட
மதுர வாணி தானாட மலரில் வேதனராட
மருவு வானு ளோராட - மதியாட
வசை மாமி யாராட நெடிய மாமனாராட
மயிலு மாடி நீயாடி - வரவேணும்"

என்னும் திருப்புகழ் பாடல் நம் மனத்திலே துள்ளிப் பாய்கிறது.

முடிவுரை

மகாவித்துவான் சு.சபாபதிமுதலியார் பழந்தமிழ்ப் புலமை மிகுதியும் வாய்க்கப் பெற்றவர் என்பதும், பிள்ளைத்தமிழ் நூலைப் பாடித் தமிழ்ப் பக்தி இலக்கியத்திற்கு அணி சேர்த்து அருந்தொண்டாற்றியுள்ளார் என்பதும் மேற்கண்டவற்றால் இனிது புலனாகின்றன.

துணை நின்ற நூல்கள்

1. சு. சபாபதிமுதலியார் 107-ஆவது குரு பூசை வெளியீடு, இர. சிவசண்முகம் (பதிப்.), மதுரை - 625 001, 2005
2. திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ், பா.சிங்காரவேலன் (பதிப்.), சிந்து பதிப்பகம், பெரியகுளம், 2009 (இரண்டாம் பதிப்பு)

* * *

சங்க இலக்கியம் சுட்டும் சூழல் மாசு

பேரா. மு. கசுத்தூரிபாய், எம்.எசி., எம்.பில்.
மதுரை

இக்காலத்தில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இயற்கை மாசுபடுவதைக் கண்டு எவ்வாறு கவலைப்படுகிறார்களோ, அதைப்போலச் சங்கச் சான்றோர்களும் கவலைப்பட்டுள்ளனர். நாடு, நகர், ஆறு ஆகியவற்றின் வளங்களைப் பாடியதோடு நின்றுவிடாமல், அங்கு நடைபெற்ற தொழில்களாலும், வேள்வியாலும், அட்டிற்சாலையாலும் ஏற்பட்ட இயற்கைப் பாதிப்புக்களையும் பதிவு செய்துள்ளனர். இயற்கை எழிலைச் சொற்சித்திரமாக வடித்த அந்தப்புலவர்கள் சூழல் பாதிப்பைச் சொல்லத் தேவையில்லைதான்; என்றாலும் மனத்தளவில் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம். அதனால்தான் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையில் கரும்பாலையின் புகையால் நெய்தற்பூ கரிந்து வாடியது என்றும், வேள்விச் சாலையிலிருந்து எழுந்த புகையால் குயில்கள் தங்கள் வாழ்விடத்தைவிட்டுப் பெயர்ந்தன என்றும், மறவர்கள் கவண்கல்லெறிந்து தங்கள் வலிமையைக் காட்ட முயன்றமையால் பனைமரத்தில் வாழ்ந்த பறவைகள் வேறிடம் சென்றுவிட்டன என்றும், சோறாக்கியபின் கொட்டிய கஞ்சி காய்ந்து புழுதியாகி எழுந்த துகள்களால் கட்டடங்கள் மாசுபடிந்தன என்றும் பாடி வைத்தார். சூழல்மாசு பற்றிய சிந்தனை செவ்வியல் இலக்கியத்தில் பயன்பாட்டு அடிப்படையில் இருந்தது என்பதை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் குறிக்கோளாகும்.

கரும்பாலை நறும்புகை

பட்டினப்பாலையின் முற்பகுதியில் காவிரியாற்றின் வளமும் சோழநாட்டின் மருதவளமும் விரிவாகப் பேசப்படுகின்றன. தென்னை, பனை, கமுகு, வாழை, மஞ்சள், மா, சேம்பு, இஞ்சி, செந்நெல் எனப் பலவகைப் பயிர்வளங்களைப் பாடிக்கொண்டே வந்த உருத்திரங்கண்ணனார் கரும்பாலைகளைச் சிறப்பாகப் பாடியுள்ளார். கார்முகில் போன்று சாறுதரும் கார்க்கரும்பினைப் பிழிந்து பாகு காய்ச்சும்பொழுது எழுந்த புகையால் நீர்நிறைந்த வயலில் வளர்ந்திருந்த நெய்தற்பூ வாடியது என்று குறிப்பிட்டுள்ளார்.

"கார்க் கரும்பின் கமழ் ஆலைத்
தீத் தெறுவின் கவின் வாடி
நீர்ச் செறுவின் நீள் நெய்தற்
பூச் சாம்பும் புலம்" (பட்டினப். 8-12)

தவப்பள்ளி

வளநகராகிய காவிரிப்பூம்பட்டிணத்தில் தவம் பூண்டொழுகிய வேள்வியாசான்கள் வேள்வித்தீ வளர்த்தமையால் எழுந்த புகை அங்குப் பொழில்களில் வாழ்ந்த கூவும் குயிலினங்களை விரட்டிவிட்டது என்ற தகவலையும் பதிவு செய்துள்ளார். ஆண்குயில்கள் பெடைகளோடு புகைநெடி தாங்கமுடியாமல் உயிருக்குப் பயந்து சிதறி ஓடின என்கின்றார். இப்படி மனிதர்கள் அறிந்தும் அறியாமலும் நம்பிக்கை காரணமாகவும் செய்கின்ற செயல்களால் இயற்கை பாதிக்கப்பட்டுச் சூழல்மாசு ஏற்படுகின்றது. குறிப்பிட்ட இடத்தில் வாழ்ந்த பறவைக் கூட்டங்கள் இடம்பெயர்ந்துவிட்டால் அதன் அழகையும் குரலோசையையும் கேட்கின்ற வாய்ப்பை இழந்து விடுகிறோம் என்ற உண்மையும் இதனால் விளங்கும்.

"தவப்பள்ளித் தாழ்கவின்
அவிர்சடை முனிவர் அங்கு வேட்கும்
ஆவுதி நறும்புகை முனைஇக் குயில்தம்
மாயிரு பெடையோடு இரியல் போகி" (மேலது : 53-58)

வீர விளையாட்டு

மறவர்கள் தங்களுக்குள் வலிமைமிக்கார் யார் என்பதை, கவண்கல்லெறிதல் போட்டியின் மூலம் முடிவுசெய்யும் வீரவிளையாட்டு நிகழ்ந்ததையும் பட்டினப்பாலை இயம்புகின்றது. உயரமான பனைமரத்தின் உச்சியை இலக்காக வைத்துக் கவண்கல்லெறிந்தமையால் பனைமரத்தில் வாழ்ந்த பறவையினங்கள் அஞ்சி இடம் பெயர்ந்துவிட்டனவாம்.

"கல்லெறியும் கவண்வெரிஇப்
புள்ளிரியும் புகர்ப்போந்தை" (மேலது : 69-74)

அட்டிற் சாலை

புகார் நகரத்து அட்டிற்சாலை என்னும் அறச்சாலையிலிருந்து கொட்டிய கஞ்சி காய்ந்து எழுந்த புழுதியால் அரண்மனை மாசுபட்டதைப் பதிவுசெய்த உருத்திரங்கண்ணனார் கவலையைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

அவர் இன்றைய சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கெல்லாம் ஒரு முன்னோடி என்பதை இந்த ஆய்வுரை உணர்த்தும்.

தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும்

மாண்புமிகு தமிழக முதல்வரின் அறிவிப்புக்கு செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திரு. இரா. குருசாமி அவர்கள் அனுப்பிய பாராட்டுக் கடிதத்தின் விபரம்

உலகத் தமிழ் செம்மொழி மாநாடு கடந்த ஜூன் 23 முதல் 27 வரை கோவையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டில் தமிழின் பெருமையைப் பறைசாற்றும் வகையில் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் ஆய்வரங்குகள் அகில உலகமே வியக்கும் வகையில் நடத்தப்பெற்றன. மேற்படி மாநாட்டின் நிறைவு விழாவில் தமிழில் படித்தவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குவதற்குச் சட்டம் கொண்டுவரப்படும் என்ற அறிவிப்பு தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு வரப்பிரசாதமாகும்.

மேலும் மதுரைத் தமிழச்சங்கம் நடத்திவரும் செந்தமிழ்க் கல்லூரியில் தமிழ் மட்டும் பாடமொழியாகவும், பயிற்று மொழியாகவும் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் தமிழ் மட்டும் பயிற்று மொழியாகக் கொண்டுள்ள ஒரே கல்லூரி செந்தமிழ்க் கல்லூரி ஆகும். இக்கல்லூரியில் தமிழுக்கு மட்டும் முக்கியத்துவம் அளித்து, இதுநாள் வரை (58 ஆண்டுகள்) தமிழ்க் கல்லூரியாகச் செயல்பட்டு வருகிறது. இது தொடர்பாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பலமுறை கடிதங்கள் மூலமாகக் கோரிக்கை அனுப்பப்பட்டது. உலத்தமிழ் செம்மொழி மாநாட்டின் வாயிலாக எங்களது கனவு நனவாகியது. இதனால் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களின் எதிர்காலம் சூரியனைப் போன்று பிரகாசமாக இருக்கும்.

எனவே இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினால், தமிழ் படித்த மாணவர்களின் வாழ்வில் ஒளிவிளக்கை ஏற்றி வைத்த முத்தமிழ் அறிஞர் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குச் செந்தமிழ்க் கல்லூரியின் சார்பாக நன்றியையும், பாராட்டையும் சமர்பிக்கிறோம். இதற்கு உறுதுணையாக இருந்த துணைமுதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் மத்திய அமைச்சர் மாண்புமிகு மு.க.அழகிரி அவர்களுக்கும் அன்பான நன்றியைத் தெரிவிக்கிறோம்.

(இரா. குருசாமி)
செயலாளர்

திருக்குறள் வரலாறு

3. நூல் வழி

1903ஆம் ஆண்டு இதழின் மறுபதிப்பு | *மகாவித்துவான் ரா. ராகவய்யங்கார்*

இனித், தெய்வப்புலவர் இந்நூலியலதிகார முறைகளை தன் வழிப்பற்றி வகுத்தோதினாரெனின், சிலவற்றை வடநூனெறியானும் சிலவற்றைத் தமிழ் நூனெறியானும் கூறினாரென்க. இருமொழிக்கண்ணுமுள்ள தொல்லாசிரியர் நன்னெறிதழுவி முதற்கட் கடவுள் வாழ்த்தும், "அமரர்கண்" முடியுமறுவகை யானும்" என்னுந் தொல்காப்பியப் புறத்திணை இயல் சூத்திரத்து ஓதிய முறையான், வாழ்த்துதற்குரிய முனிவரும், பார்ப்பாரும், ஆநிரையும் மழையும், முடியுடை வேந்தரும், உலகும் எனப்பட்ட ஆறுவகையுள் மற்றை ஐந்தும் நிலைத்தற்குக் காரணமாதலானும், "நிலத்தியல்பு வானமுரைத்து விடும்" என்பதனால் ஒரு நாட்டாரது ஒழுக்கத்தினை யறிதற்குப் பெருங்குறியாதலானும், மக்கண்முயற்சியாற் பெறலாவதன்றித் தெய்வத்தானே எய்துவதொன்றாகலானும் அதனை யடுத்து வான்சிறப்புக் கூறினார். "அறனில் வேந்தனாளும் அதனையடுத்து வான் சிறப்புக்கூறினார். "அறனில் வேந்தனாளும் வறனுறுகுன்றம்" என்னுங் களிற்றியானைநிரையுள் அறனின்மைக்கேற்ப மழையின்றி வறனுறுதல் கூறியவாறுணர்க. ''கடவுன்மழை'' என்றார் திருச்சிற்றம்பலக்கோவைக்கொளுவினும். இனித், தாம் ஒழுக்க நூல் ஓதுதலால் அவ்வொழுக்கத்தை நன்றொழுகி அதனை உள்ளவாறு உலகிற்குணர்த்திய முனிவரது பெருமையுணர்த்தலும் அவ்வறுமுறை வாழ்த்துள் ஒன்றாதலின் வான்சிறப்பை யடுத்து நீத்தார்பெருமை ஓதினார்.

(மனுஸ்மிருதி - அத் - 2. சுலோ 224) (சிலர் அறம் பொருள்களையும், சிலர் பொருளின்பங்களையும் சிலர் அறத்தினையும், சிலர் பொருளினையுஞ் சிறந்தது என்ப.) என்பதனால் அறஞ்சிறந்தது என்ற பெரியார் பக்கமே தழுவி, "சிறப்பினுஞ் செல்வமு மீனும்" என்பதனால் அவ்வறம் உயிரெய்துதற்குரிய போகமோக்ஷங்கட்குக் காரணமாதலை விளக்கி, 'அறன் வலியுறுத்தல்' என்ற ஓரதிகாரம் அவற்றை யடுத்தோதி அந்நான்கினையும் இந்நூற்குப் பாயிரமாக வைத்தார்.

மேல் அறத்துப்பாலை இல்லறத்துறவறமெனப் பகுத்ததும், இரு மொழியாளர்க்கும் உடன்பாடாம். "கிழவனுங் கிழத்தியுஞ் சிறந்தது பயிற்றல் இருத்தன் பயனே" (தொல். கள. 51) என்பதனால், தமிழர்க்கு

உடன்பாடாதல் அறிக. இனி, ஒரு சாரார், பிரமசரியம் சீடராய் நின்று ஓதுவதல்லது பிறிதொன்றன்மையின் அதனைப் புதல்வரைப் பெறுதல் என்பதனுள் அடக்கி இல்லறங்கூறி, அதன்பின் துறவறங் கூறுவார். அருளுடைமை முதல் நிலையாமை இறுதியாய் அதிகாரங்கள் பத்தும் வானப்பிரத்தம் எனவும், ஏனைத்துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் என்ற மூன்றையும் சந்நியாசமெனவும் பகுத்தோதினார் என்ப. அவர் கூறுமாறு இதனிடையிற் கூறப்பட்ட பண்டையோர் உரைப்பாயிரத்தால் இனிது விளங்கும்.

இனிப் பொருட்பாலை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்றாகக் கொள்வர் ஆசிரியர் பரிமேலழகர். ஒரு சாரார், பொருட்பால் கூறிய அதிகாரங்கள் எழுபதும் அரசியல், அமைச்சியல், பொருளியல், நட்பியல், துன்பவியல், குடியியல் என அறுவகைப்படுத்துவர். அவர் கூறுமாறு :

"பொருட்பாலாவது பொருளின் பகுதி என்று கொள்ளப்படும். பொருளென்றது மக்களையுடைத்தாகிய நிலம். பகுதியாவது அந்நிலத்தை யாளுதற்குரிய அரசரது தன்மையும், அவராளுதற்குச் செய்யுந் திறன்களும், அவர்க்குத் துணையான அமாத்தியரிலக்கணமும், அவர் செய்யுந் திறன்களும் அவ்விருவராலும் உண்டாக்கப்பட்ட நாடும் அரணும் பொருளும் படையுமாகிய இவற்றினது திறன்களும், அவ்வாறுண்டாகிய பொருட்கும் பொருளுடையார்க்கும் கேடுவருந்திறன்களும், அந்நிலத்துண்டான மக்கள் இயல்பும், அவர் பொருள் செய்யுமாறுங் கூறுதல். இவையெல்லாம் அரசியலும், அமைச்சியலும், பொருளியலும், நட்பியலும், துன்பவியலும், குடியியலுமென அடங்கும். படையியல், அரணியல் என வகுத்தார் உளராலெனின் : அவையெல்லாம் ஒருவனால் ஆக்கப்படும் பொருளாகலின் பொருளியலென அடங்கும். துன்ப வியலென்ற தெற்றுக்கு? அதனையும் நட்பியலுள் அடக்கினாருளராலெனின்; அவையெல்லா நட்கப்படா வென்னுங் கருத்தினாற் கூறினார்களாயினும் அவற்றினிடைக்கிடந்த பேதைமை, புல்லறிவாண்மை என்னுமதிகாரங்கள் நட்கப்படாதாகவும், நட்கப்படுவனவுமன்றி ஒருவர்க்குத் துன்பத்திற்குக் காரணமாமென்று கூறுதலாற் துன்பவியலெனல வேண்டுமென்க. இதனுள் இறைமாட்சி முதலாக இடுக்கணழியாமை யீறாகக் கூறிய அதிகாரங்கள் இருபத்தைந்தும் பெரும்பான்மையும் அமைச்சர்க்குரிய வாகலின் அமைச்சியலென்றும், நாடு முதலாகப் படைச்செருக்கீறாகக் கூறிய அதிகாரங்களைந்தும் பொருளாதலிற் பொருளிய லென்றும், நட்பு முதலாகக் கூடா நட்பீறாகக் கூறிய அதிகாரங்களைந்தும் நட்பின் பகுதியவாதலின் நட்பியலென்றும்,

பேதைமை முதலாக மருந்தீறாகக் கூறிய அதிகாரங்கள் பன்னிரண்டும் கேட்டுக்குக் காரணமாதலிற் துன்பவியல் என்றும், குடிமை முதலாகக் கயமையீறாகக் கூறிய அதிகாரங்கள் பதின்மூன்றும் மக்களதியல்பு கூறுதலிற் குடியியலென்றும், ஆகப் பொருட்பால் கூறிய அதிகாரங்கள் எழுபதும் ஆறுபகுதியாயிற்று'' எனக் கண்டுகொள்க.

அங்கவியலினை அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பென வடநூனெறியே ஓதினாரென்பது மேலே கூறினாம். ஒழிபியலிற் கூறியன பலவும் மக்கட்கின்றியமையாத உறுதிகளைத் தம் தெய்வப்புலமையாற் றெளிந்து உரைத்தாரென்க.

இனிக் காமத்துப்பாலைக் களவியல், கற்பியலெனத் தமிழ்நூன் முறையிற் பகுத்து, அதுவே, ஸம்போகம், விப்ரலம்பம் என்னும் வடநூனெறிக்கும் ஒத்தலான், அக்களவில் ஸம்போக நிமித்தமும், ஸம்போகத்தின் மகிழ்தல் முதலியனவுங் கூறிப் பின் விப்பிரலம்பமாகிய கற்பினுள் வடநூலுட் பிரவாசம் விரகம், அயோகம், மானம், சாபம் எனப்பட்ட ஐந்தனுட் சாபத்தினை யொழித்து மற்றை நான்கினையும் செலவு ஆற்றாமை விதுப்புப்புலவி என்னும் பெயராற் கூறினார் என்பது ஆசிரியர் பரிமேலழகர்க்குக் கருத்தாகும். திருவள்ளுவர் சாபத்தினை ஒழித்தற்குக் காரணம் அப்பரிமேலழகரே அந்நூலிறுதியில் கூறிய வாக்கியங்களான் உணரப்படும். ''பிரிவினொடு புணர்ந்தது கற்பெனப்படுமே'' (தொல். செய். 188) என்பதனால், விப்பிரலம்பமும் கற்பாதல் தெள்ளிது. இனி, ஒரு சாரார் காமத்துப்பாலுட் கூறப்பட்ட இருபத்தைந்து அதிகாரத்தையுந் தமிழ் நூல்வழியே தழுவி ஐந்திணைக்குமுரித்தாக்கிக் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்தற்கும் முறையே தனித்தனி ஐந்து அதிகாரங்களாகத் திருவள்ளுவர் பகுத்தோதினார் என்ப. அவர் கூறும் உரைப்பாயிரமாவது :

'புருடார்த்தமாகிய தன்மார்த்த காமமோக்கங்களுள் முதன் மூன்றையும் வழுவாதொழுகவே மோக்க மெய்துதலான், அதற்கு வேறு வகுத்துக் கூறவேண்டுவதின்மையின் அஃதொழித்து ஒழிந்த தன்மார்த்த காமப்பகுதிகளை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் பேர் கூறுவார், மங்கலவகையான் எப்பொருட்கு முதலாகிய கடவுள் வாழ்த்தும், அக்கடவுளினது செய்கைத்தாகி இவ்வுலகின்றியமையாதாகிய வான்சிறப்பும், பிறப்பினிற் சிறப்பெய்துதற்குரியராகிய முனிவரது பெருமையும், அவராற் கொண்டுய்க்கப்படுகின்ற அறத்தினது வலியும் நான்கதிராத்தாற் பரித்துப் பிரமசரியம், காருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாதம் என்னும் நால்வகைப்பட்ட அறத்தினுட் பிரமசரியஞ் சீடராய் நின்றோதுவதல்லது செய்வது பிறிதின்மையின் அதனைப் புதல்வரைப் பெறுதல் என்புழியடக்கிக் காருகத்தம் இருபததிகாரத்தானும்,

வானப்பிரத்தம் பத்ததிகாரத்தானும், சந்நியாதம் மூன்றதிகாரத்தானும், எல்லார்க்கும் பொதுவாகிய ஊழ் ஓரதிகாரத்தானுமாக முப்பத்து நான்கதிகாரத்தான் அறத்துப்பால் கூறிப் பொருட்பால், அரசனை முதலாக நாட்டி அவற்றுக்குப் புறத்துறுப்பாவன படைகுடிகூழமைச்சு நட்பரணென ஆறாகப் பகுத்து அரசர்க்குரிய திறம் இருபத்தைந்து அதிகாரத்தாலும், அமைச்சரதியல்பு பத்ததிகாரத்தானும், நாடும் அரணும் பொருளும் ஒரோரதிகாரத்தானும், படை இரண்டதிகாரத்தானும், நட்பு ஐந்ததிகாரத்தானும், பகை ஆறதிகாரத்தானும், அரசற்கு அங்கமான பெரியாரைப் பிழையாமை முதல் மருந்தீறாக ஆறும் ஆறதிகாரத் தானும், அதற்குறுப்பாகிய குடிமை முதல் நாணுடைமை எனப்படுவன ஏழும் ஏழதிகாரத்தானும், அரசர்க்கும் ஏனை வருணங்கட்கும் ஒப்பவுரித்தாகிய குடிசெயல்வகையும், அவருட் பார்ப்பாரொழித்துப் பெரும்பான்மை வேளாளர்க்குரித்தாகி, ஏனையோர்க்குச் சிறுபான்மையுரித்தாகிய உழவும் ஒரோரதிகாரத்தானும், அவ்வாறு பொருள் செய்யாதவழி யுளதாகும் நல்குரவும், அது பற்றித்தோன்றும் இரவும், இரவின்கண் உளதாகிய அச்சமும், இரப்பார்க்கீயாதாருள்ளிட்ட கயவரதொழுக்கமுமாகிய இந்நான்கும் ஒரோரதிகாரத்தானுமாக எழுபததிகாரத்தாற் கூறிக் காமத்துப்பால் கூறுவார். குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்திணையும், முதல் கருவுரிப்பொருள் என்ற மூன்றனுட் பெரும்பான்மையும் உரிப்பொருள் பற்றிப் புணர்தலும் புணர்தனிமித்தமும் குறிஞ்சி எனவும், பிரிதலும் பிரதனிமித்தமும் பாலையெனவும், இருத்தலும் இருத்தனிமித்தமும் முல்லை எனவும், ஊடலும் ஊடனிமித்தமும் மருதமெனவும் ஒரோவொரு நிலம் ஐந்ததிகாரமாக இருபத்தைந்ததிகாரத்தாற் கூறி ஆக நூற்று முப்பத்து மூன்றதிகாரமாக்கி, ஒரோ வதிகாரம் பத்துக்குறள் வெண்பாட்டாகக்கொண்டு இங்ஙனம் ஆயிரத்து முந்நூற்று முப்பது பாட்டான் வடநூலுந் தமிழ் நூலுங் கூறும் பொருள் எல்லாந் தொகுத்துக் கூறினாரெனவுணர்க.

இனித் தமிழ் நூல்களோடு பொருந்தக் கூறினாரென்பது மேற் கூறியவாற்றாற் சிறிது உணரப்படும். இவர், ''அகரமுதல வெழுத்தெல்லாம் என அகரமுதலாகத் தொடங்கி ''ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பங் கூடி முயங்கப் பெறின்'' எனத் தமிழிற்சிறந்த னகரவொற்றிறுதியாகக் கூறியது தமிழிற்குப் பொருந்தவைத்தமை குறித்தாகும். வடநூலில், வான்மீகி முனிவரும், எனக் காயத்திரியின் முதலெழுத்தாகிய தகார முதலாகத் தொடங்கி ''ஈயாத்'' எனக் காய்த்திரியினுறுதியாகிய, ''யாத்'' என முடித்தலால், தம் நூலினைக் காயத்திரி அருத்தமாகக் கொள்க என்பது குறித்தாற்போலக் கொள்க.

இனித் தமிழ் நூல்களுள் தொல்காப்பியத்தினையே தமக்கிலக்கணமாகக் கொண்டு திருவள்ளுவர் இந்நூலை ஓதினார் என்பது. ''நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த, மறை மொழி தானே மந்திரமென்ப'' என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் (179) சூத்திரத்தின் சொல்லும் பொருளும் கொண்டு ''நிறைமொழி மாந்தராணை நிலத்து, மறைமொழி காட்டி விடும்'' என்று கூறினார். ''அந்நிலைமருங்கினறமுதலாகிய, மும்முதற்பொருட்கு முரியவென்ப'' (செய். 106) எனத் தொல்காப்பியனார் பாவினைப் பொருட்குரியவாற்றான் வரையறை செய்த இலக்கணந் தரீஇயயுரைத்தமயும் காண்க. நச்சினார்க்கினியரும், தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில் இச்சூத்திரத்தினை எடுத்தோதி, ''இக்கருத்தானே வள்ளுவனாரும் முப்பாலாக் கூறி, மெய்யுணர்தலான் வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறினார்'' என்பர்.

இனி, மாவு, மாக்களு மையறிவினவே, மக்கடாமே ஆறறிவுயிரே'' எனத் தொல்காப்பியனார் மரபியலிற் கூறிய இலக்கணம் பிழையாது இத்திருக்குறளிற் பலவிடத்தும் மாக்கள் என்னுஞ் சொல்லை அறிவொழுக்கங்களில்லா இழிந்தோரிடத்தும், மக்கள் என்னுஞ் சொல்லை அவையுடைய உயர்ந்தோரிடத்தும் வழங்கி வருதலுங் கண்டுகொள்க. ''கொலைவினையாகிய மாக்கள்'' (329) செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்'' (420) எனவும், ''மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்'' (997) மக்களே போல்வர் கயவர்'' (1071) எனவும் வருவனவற்றான் உணர்க.

துறவறவியல் முதற்கண் அருளுடைமை கூறியதும், ''அருளொடு புணர்ந்த வகற்சி'' (தொல்-புற. 21) என்பது பற்றிக் கொண்டதாகும்.

''கடலன்ன காமமுழந்தும் மடலேறாப், பெண்ணிற் பெருந்தக்கதில்'' (1137) என்பது ''எத்திணை மருங்கினு மகடூஉ மடன்மேற், பொற்புடை நெறிமை யின்மை யான'' (தொல். அகத். 35) என்னும் சூத்திர நெறியிலே யுரைத்ததாகும். இத்திருக்குறள் தொல்காப்பியனார் கூறிய தாயபனுவலுள் (செய். 234) ஒன்றாதலின் அப்பனுவற்பாற்பட்ட மற்றைக் கீழ்க்கணக்கு நூல்களோடு பெரும்பான்மை கருத்தொப்புதாகும். எட்டுத்தொகை நூல்களினும் இதன் கருத்துப்பியிலும். இவற்றுட் கலித்தொகைக்கண் அவ்வாறு மிகுத்துக் காணலாம். இவற்றின் பொருத்தங்களை ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டப்புகின் பெரிதும் விரியுமென்பது.

(இன்னும் வளரும்)

5 செயற்கைக்கோள்களுடன் பி.எஸ்.எல்.வி. வெற்றிப் பயணம்

2013-ல் ஆளில்லா விண்கலம் செலுத்தப்படும்

இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்ணன் தகவல்



ஸ்ரீஹரிகோட்டா, ஜூலை 12 : ஆளில்லா விண்கலம் 2013ஆம் ஆண்டில் விண்வெளிக்கு அனுப்பப்படும் என்று இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் முயற்சியில் முதற்கட்டமாக ஆளில்லா விண்கலம் அனுப்பப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவாண் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. - சி 15 ராக்கெட் 5 செயற்கைக் கோள்களுடன் திங்கள்கிழமை வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

அதன்பிறகு இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்ணன், இஸ்ரோ விண்வெளி ஆய்வு மைய இயக்குநர் அலெக்ஸ், விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மையத்தின் இயக்குநர் வீரராகவன், பி.எஸ்.எல்.வி. திட்ட இயக்குநர் உன்னி கிருஷ்ணன் உள்ளிட்ட விஞ்ஞானிகள் நிருபர்களிடம் கூறியது :

ஸ்ரீஹரிகோட்டாவில் பி.எஸ்.எல்.வி - சி 15 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டதைக் கொண்டாடும் வகையில் அதன் மாதிரியுடன் (இடமிருந்து) விஞ்ஞானி ராமகிருஷ்ணன், விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மையத் தலைவர் பி.எஸ். வீரராகவன், இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்ணன், இஸ்ரோ விண்வெளி ஆய்வு மையத் தலைவர் டி.கே. அலெக்ஸ், ஹைதராபாதில் உள்ள தேசிய தொலையுணர்வு மையத்தின் இயக்குநர் ஜெயராமன்.

விண்வெளிக்கு மனிதனை அனுப்புவதற்கான முன்னோட்டமாக இந்த ஆளில்லா விண்கலம் 2013-ம் ஆண்டில் அனுப்பப்படும். பி.எஸ்.எல்.வி. ராக்கெட் மூலம் அனுப்பப்படும் இந்த விண்கலம், பூமியை 70 நாள்களுக்குச் சுற்றி வரும். மனிதர்கள் விண்வெளியில் தங்குவதற்குத் தேவையான சுற்றுப்புறச்சூழல், அவர்களைத் தாக்கும் கதிர் வீச்சு ஆகியவை குறித்து இந்த கலத்தின் மூலம் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

முக்கியமாக, இந்த ஓடத்தை பூமியில் பத்திரமாக இறக்குவதற்கான தொழில் நுட்பம் பொருத்தப்படும்.

விண்வெளிக்கு மனிதன் எப்போது?

விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக, ஸ்ரீஹரிகோட்டாவில் அடிப்படைக் கட்டமைப்புப் பணிகள் ரூ. 1000 கோடியில் மேற்கொள்ளப்படும். விண்கலத்தை அனுப்புவதற்காக 3-வது ஏவுதளம் அமைத்தல், விண்வெளி வீரர்களை உருவாக்குவதற்கான பயிற்சி மையங்களை உருவாக்குதல் ஆகியவை இதில் அடங்கும். இவை அனைத்தும் உருவாக்கப்பட்ட பிறகு விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கு எந்தக் காலக்கெடுவையும் குறிப்பிட முடியாது.

சந்திராயன் - 2

சந்திராயன் - 2 விண்கலம் வரும் 2013ம் ஆண்டு செலுத்தப்படும். நிலவில் பத்திரமாக தரையிறங்குவது, நிலவில் சுற்றி தகவல்களைச் சேகரிப்பது ஆகிய அம்சங்கள் இதில் மேம்படுத்தப்படும்.

செப்டம்பரில்

அடுத்த ராக்கெட்டுகள்

வரும் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் ஜி.எஸ்.எல்.வி. - எப்06 ராக்கெட்டும், பி.எஸ்.எல்.வி. சி - 16 ராக்கெட்டும் ஏவப்பட உள்ளன.

இதற்கான ஆயத்தப் பணிகள் உடனடியாகத் தொடங்கும். ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட்டில் ஜிசாட் 5 - பி என்ற நவீன தொலைத்தொடர்பு செயற்கைக்கோள் செலுத்தப்பட உள்ளது. இந்தச் செயற்கைக்கோள் முக்கியமாகத் தொலைக்காட்சி ஒளிபரப்புக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

பி.எஸ்.எல்.வி. ராக்கெட்டில் செலுத்தப்படும் ரிசோர்ஸ்சாட் - 2 என்ற செயற்கைக் கோள் விவசாயத் துறைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ரிசோர்ஸ்சாட் - 1 செயற்கைக் கோளுக்கு கிடைத்த வரவேற்பையடுத்து இந்தச் செயற்கைக்கோள் செலுத்தப்படுகிறது என்று அவர்கள் தெரிவித்தனர்.

புனித தலங்களைப் படம் பிடிக்கிறது கார்ட்டோசாட்

பி.எஸ்.எல்.வி. - சி 15 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்ட கார்ட்டோசாட் - 2 பி செயற்கைக்கோள் செவ்வாய்க்கிழமை முதல் பூமியைச் சுற்றி படம் எடுக்கத் தொடங்கும்.

அவ்வாறு பூமியைச் சுற்றும்போது வாரணாசி, நாகபுரி, திருப்பதி, மதுரை உள்ளிட்ட புனிதத் தலங்களைப் படம் பிடித்து அனுப்ப உள்ளதாக இஸ்ரோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுமார் 630 கி.மீ. உயரத்திலிருந்து சக்திவாய்ந்த கேமரா மூலம் படம் எடுக்கப்படுவதால் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கோபுரம் கூட மிகத் துல்லியமாகத் தெரியும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இந்த கேமரா மூலம் ஒரே நேரத்தில் 10 கிலோ மீட்டர் பரப்பளவு வரை படம் பிடிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

கருணாமிருத சாகரம்
தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்

ஆதி. பாலசுந்தரன்
நாகர்கோவில்

தமிழிசை வித்தகர்கள் சீகாழி மூவர் முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தா பிள்ளை போலவே வேதநாயகம் பிள்ளை, தஞ்சை வேதநாயக சாத்திரியார் ஆகிய இசை விற்பன்னர்களும், தமிழில் இசைப் பாடல்களைப் பாடி, கருநாடக இசைக்குக் கொடையாக வழங்கியுள்ளனர்; ''சாகித்திய கருத்தாக்கள்''. இவர்களின் இசை மரபு வழி வந்தவர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர். இவர் இசை இலக்கண ஆய்வாளர்.

அடிப்படையில், இவர் நாட்டு மருத்துவர். மூலிகைகளைப் பற்றி ஆய்வு செய்து வருபவர். மூலிகை மருத்துவ மேதை. ஆயினும், கருநாடக இசை மீது அளப்பரிய ஆர்வம் நிறைந்தவர். இசை பற்றிய சிறந்த சிந்தனையாளர்.

நெல்லை மாவட்டம் தென்காசியை அடுத்த சாம்பவார் வடகரை என்னும் சிற்றூரில் 1859 ஆகஸ்ட் 2இல் பிறந்தார். பெற்றோர் முத்துசாமி நாடார் - அன்னம்மாள். தென்காசி அருகில் சுரண்டை என்னும் சிற்றூரில் பள்ளிக் கல்வியை முடித்தார். திண்டுக்கல் சிவிஇஎஸ் நார்மல் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியப் பயிற்சியை நிறைவு செய்தார்.

பண்டிதரின் முன்னோர் மூலிகை மருத்துவத்தில் நிபுணர்களாக விளங்கினர். இந்த மருத்துவ முறை இவரை மிகவும் நாட்டு மருத்துவத்திலும் ஆராய்ச்சியிலும் ஈடுபடச் செய்தது.

இவ் ஈடுபாட்டால் அடர்பனி, தொடர்மழை, பசுமை வனப்பு மிகுந்ததும், மேற்கு மலைத் தொடரில் அமைந்ததுமான சுருளி மலைக்கு 1879ஆம் ஆண்டு தமது இருபதாம் வயதிலேயே சென்றுவிட்டார்.

கானகப் பல்கலைக்கழகமாகிய சுருளி மலையில், மோனத் தவம் இயற்றி வந்த கருணானந்த அடிகளார் என்னும் துறவியின் தொடர்பும் அருளாசியும் பண்டிதருக்குக் கிடைத்தன. இது இவருக்கு வாய்த்த நற்பேறு !

அரிய வகை மருத்துவ மூலிகைகளை இனம் காணும் கூர்த்த நோக்கையும், மூலிகை கொண்டு நாட்டு மருந்து தயாரிக்கும் செய்முறைப் பயிற்சியையும், அம்மருந்துகள் குணப்படுத்தும் நோய்களின் தன்மைகளையும் அத்துறவியார் பண்டிதருக்கு விளக்கிக் கற்றுக் கொடுத்தார். தம் குருவின் அருளாசியால், செய்முறை அனுபவங்களையும், கைப்பக்குவ முறைகளையும் தெளிவாக உணர்ந்து கொண்டார்.

இந்த மூலிகை மருத்துவ நடைமுறை அனுபவ அறிவோடு, குருவிடம் விடைபெற்று, சுருளி மலையிலிருந்து புறப்பட்டார் பண்டிதர்.

ஞானவடிவு பொன்னம்மை என்னும் அம்மையைத் திருமணம் செய்து கொண்ட பண்டிதர், தஞ்சாவூரில் லேடி நேப்பியர் மகளிர் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியில் சேர்ந்தார். இவர்தம் துணைவியார் தலைமை ஆசிரியராகப் பணி புரிந்தமையும் அப்பள்ளியிலேயே. இவர்களின் கல்வி பயிற்று முறை பெற்றோர்களின் நடுவில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

1890 இல், இருவரும் ஆசிரியப் பணியினின்றும் நீங்கினர். இது, இவர்களின் வாழ்க்கையில் பெரிய திருப்புமுனையாக அமைந்தது.

தஞ்சை அருகில், பெரிய அளவில் நிலம் வாங்கி, மூலிகைப் பண்ணை அமைத்தார் பண்டிதர். தம் குருவுக்குக் காணிக்கையாகக் கருணானந்தபுரம் என்று அப்பண்ணை அமைந்த பகுதிக்குப் பெயர் இட்டார். இது, இன்றைக்குப் பண்டிதர் தோட்டம் என்று அழைக்கப்படுகிறது.

தஞ்சை நகருக்குள் கருணாநிதி ஹால் என்ற பெயரில் மருத்துவமனை ஒன்று அமைத்தார். மூலிகை மருத்துவம் செய்தார். நோயாளிகள் பெரிதும் பயன் பெற்றனர்.

பண்டிதர் தயார் செய்த கோரோசனை மாத்திரை பரவலான புகழ் பெறத் தொடங்கியது. உள் நாட்டில் மட்டுமன்றி, இலங்கை, மியான்மர் முதலிய வெளிநாடுகளிலும் பெயர் பெற்று விளங்கியது.

1908 பிப் 22 இல், அப்போதைய சென்னை ஆளுநர் சர். ஆர்தர் லாலி, அவர்தம் துணைவியார் இருவரும் தஞ்சை வந்தனர். பண்டிதரை, அவரின் இருப்பிடத்துக்கே சென்று நேரில் சந்தித்தனர். அவர் ஆற்றி வரும் மூலிகை மருத்துவப் பணிகளை மிகவும் பாராட்டினார்கள்.

1909இல், ஆங்கிலேய அரசு பண்டிதருக்கு, ''ராவ் சாகிப்'' என்னும் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியது. இதற்கு சர்.ஆர்தர் லாலி பரிந்துரை செய்ததே காரணம்.

ஆளுநர் லாலி வருகைதந்த நினைவைப் போற்றும் வகையில், பண்டிதர் அமைத்த சமுதாயக் கூடத்துக்கு ''லாலி ஹால்'' என்னும் பெயர் இட்டுப் பெருமைப்படுத்தினார்.

மருத்துவ முறையில் ஆய்வு செய்து புதியன காண்பதில் பண்டிதர் ஈடுபட்டிருந்தாலும், கருநாடக இசை மீது வேணவாக் கொண்டு விளங்கினார்.

அப்போது திண்டுக்கல்லில் வாழ்ந்த இசை வித்துவான் சடையாண்டி பட்டர் என்பவரிடம் முறைப்படி கருநாடக இசை கற்றுக் கொண்டார். கருநாடக இசை இலக்கணத்தின் மீது சில ஐயங்களை எழுப்பி, தெளிவான விடையும் காண விழைந்தார்.

பண்டிதருக்குச் ''சங்கீத வித்துவான்கள்'' சிலர் நண்பர்களாகக் கிடைத்தார்கள். அவர்களிடம் கருநாடக இசைக் கூறுகளான சுருதி, சுரங்கள் பற்றி ஆராய்ச்சி முறையில் விவாதம் நடத்தினார். அவர்கள் ஆராய்ந்து எழுதிய

ஆய்வுக் கட்டுரைகள் பண்டிதருக்கு மனநிறைவைத் தரவில்லை. அவர்களின் ஆய்வு முடிவுகளை ஏற்றுக் கொள்வதில் மனம் இசையவில்லை.

"சரியாக உறுதி செய்யப்படாத அறிவியல் கருத்தும், அடிப்படைக் கட்டமைப்பு இல்லாத கட்டிடமும் எப்படி நிலைத்து நிற்கும் !" என அவர்களின் ஆய்வுகள் பற்றி வினாத் தொடுத்தார்.

1912 இல், அப்போதைய ஆளுநர் கார்மைக்கேல் பிரபு தஞ்சாவூருக்கு வருகை தந்தார். ஆளுநர் கார்மைக்கேல் புகழ்பெற்று விளங்கிய கோனேரி ராசபுரம் வைத்தியநாதையர், திருக்கோடிக்கா கிருட்டின அய்யர், அரிகேசரி நல்லூர் முத்தையா பாகவதர் முதலான "சங்கீத வித்துவான்கள்" ஆளுநரை வரவேற்கும் வரவேற்பு விழாவில் அமர்ந்திருந்தனர்.

அப்போது, பண்டிதர் தமது வரவேற்புரையில், "இசைச் சங்கம் ஒன்று தொடங்க வேண்டும்; அச்சங்கத்தில் சுருதி, சுரம், சுரத்தானம் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளவும், விவாதிக்கவும் வேண்டும்" எனத் தீர்மானம் கொணர்ந்து நிறைவேற்றினார்.

இராமநாதபுரம் சேதுபதி மன்னர் இந்த இசைச் சங்கத்தின் புரவலராக அமர்ந்து பணியாற்ற இசைவு தெரிவித்தார்.

இசை வளர்ச்சிக்குத் தொடர்பான சில இலக்குகளை வரையறுத்து இச்சங்கம் நிறைவேற்ற வேண்டும் எனத் தீர்மானித்தனர். அவை :

1. தென் இந்திய இசை பற்றிய தரவு, வளர்ச்சி மேம்பாடு அடைய வேண்டிய தரவுகள் ஆகியவற்றைத் தொகுத்து அச்சிடுதல்.

2. தென் இந்திய இசை, அவ்விசையின் அடிப்படை விதிகள் இரண்டையும் ஒழுங்கமைவுடன் பயிற்றுவிப்பதை உறுதிப்படுத்தும் உயர்கல்வி நிலையமாக இச்சங்கம் அமைதல் வேண்டும்.

3. இசை பயிலும் மாணாக்கர்களுக்கும், இசை ஆர்வலர்களுக்கும் தேர்வு நடத்திச் சான்றிதழ் வழங்கிட வேண்டும்.

4. கருநாடக இசை மீது ஏற்படும் ஐயப்பாடுகளை விரிவாக ஆராய்ந்து அவற்றைக் களைய வேண்டும்.

5. புகழ்பெற்ற இசை மேதைகளைப் பாராட்டி மதிப்புறு பட்டமும், பதக்கமும் வழங்கிப் பெருமைப்படுத்தல் வேண்டும்.

இவை போன்ற சில நற்பணிகளை நடைமுறைப்படுத்த விழைந்தனர்.

தஞ்சாவூரினரான சர்.வி.பி.மாதவராவ் என்பவர் அக்காலத்தில் பரோடா சமஸ்தானத்தில் திவானாகப் பதவி வகித்தார்.

அவர், இவ் இசைச் சங்கம், சங்க நடைமுறைகள் இவற்றால் ஈர்க்கப்பட்டார். 1916இல், பரோடாவில் அகில இந்திய கருநாடக இசை மாநாட்டினை நடத்தினார். பரோடா மன்னர் சிவாஜிராவ் கெய்க்வாட் மாநாட்டைத் தொடங்கிவைத்தார்.

தனிச்சிறப்பாக அழைக்கப்பட்ட பண்டிதர், தம் புதல்வி மரகதவல்லியம்மையுடன் அம்மாநாட்டுக்குச் சென்றார். அவர் புதல்வி இசைக் குறிப்புகளோடு, தென் இந்திய இசையைச் செயல்முறை விளக்கத்தோடு தெளிவுபடுத்தினார்.

பண்டிதர், சுருதி பற்றிய தமது நீண்ட ஆய்வுரையை அவையில் வாசித்தார். அவையோர் அனைவரும் ஒருமனதாய் ஒப்புக் கொண்டனர்.

பரோடாவிலிருந்து தஞ்சை திரும்பிய பண்டிதர், வெளிநாட்டிலிருந்து மின் அச்சுப்பொறி ஒன்றை வாங்கினார். அதை லாலி ஹாலில் நிறுவினார். தாம் தொடங்கிய இசைச் சங்கத்தின் விதிமுறைகளையும், நடைமுறைகளையும் பதிப்பித்து ஆவணப்படுத்தினார்.

இசைபற்றி தாம் ஆராய்ந்து கண்ட முடிவுகளையும், இசையோடு தொடர்புடைய பிற செய்திகளையும் விளக்கி, "கருணாமிருத சாகரம்" என்னும் அரிய பெரிய ஆய்வு நூலைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் சங்கத்தின் சார்பில் வெளியிட்டார்.

இசை ஆர்வலர்க்கும், இசை பயிலும் மாணாக்கருக்கும் இந்த நூல் அரிய தகவல் களஞ்சியமாக இப்போதும் பயன்படுகிறது. ஆயிரம் பக்கங்களுக்கு மேல், பெரிய வடிவைக் கொண்டது.

இந்நூலில், வீணையின் படம், நமது மிடறு (கழுத்து) இரண்டையும் ஒப்பிட்டு வரைந்த படம் ஒன்று காணப்படுகிறது. பண்டிதரே வடிவமைத்து வரைந்தது.

வீணையின் குடப்பகுதிக்கு, மனிதத் தலைப் பகுதியை ஒப்பிட்டும், வீணையின் ஏழு தந்திகளோடு நமது மிடற்றுப் பகுதி (கழுத்துப் பகுதி) நரம்புகளோடு ஒப்பிட்டும் விளக்கியுள்ளார்.

வீணையை மீட்டும்போது, இடக்கை விரல்கள் தந்திகளைத் தடவி, சென்று வரும் நிலைக்கு ஏற்ப, வீணையிலிருந்து எழுகின்ற ஒலி அளவு வேறுபடுகிறது. அவ்வேறு பாட்டு நிலைக்கு ஏற்றவாறு சுரம் பிறக்கும்.

அதுபோன்று, குரல் எழுப்பிப் பாடுகின்ற ஒலி அளவைகளின் அளவுக்கு இயைய ஆழ்ந்தும், புடைத்தும் கழுத்து நரம்புகள் - ஒலி நாண்கள் - மேலும் கீழும் ஏறியும் இறங்கியும் செயல்படுவதை அற்புதமான இந்த ஓவியத்தின் மூலம் பண்டிதர் அழகாக விளக்கியுள்ளார். இசைபற்றிய இவரின் நுண்மாண் நுழைபுலம் இவருக்கு இறைவன் வழங்கிய அருட்கொடை!

பண்டிதரின் அரிய உழைப்பு, விரிந்த அறிவு, இசை ஈடுபாடு முதலியவற்றை இந்நூல் புலப்படுத்தும். இது ஒரு "தரவு" நூல். தமிழ்த்தாய்க்கு இவரின் அருங்கொடை ! பண்டிதரின் குருவின் பெயரால் அமைந்த கருணாமிர்த சாகரம் ஓர் இசைச் சாகரம் ! தமிழ்க்கடல் !

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/56 July 2010

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

[தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

- ✦ இளம் இலக்கியம்
- ✦ இளங்கலை
- ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர்
- ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

இரா. அழகுமலை	**முனைவர் க. சின்னப்பா**	**இரா. குருசாமி**
செயலாளர்	முதல்வர்	செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்	செந்தமிழ்க் கல்லூரி	செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

From
SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

திருமிகு.இரா.அழகுமலை
எம்.ஏ.,எம்.ஃபில்., அவர்கள்,
21-A முத்துராமலிங்கத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை 625 010.

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.